# பென்ஷன்காரருடன் வெளிவந்த இராணுவத்தை போராளிகள் தாக்கி முகாமுக்குள் அனுப்பினர்

யாழ். கோட்டை முகாமிலுள்ள இராணுவத்தினர் பென்ஷன் பெறச் சென்றவர்களின் பாதுகாப்புடன் நேற்றுக் காலை வெளியே வர முற்பட்ட போது போராளிகள் எதிர்த் தாக்குதலை மேற்கொண்டதால் இருபகுதியினருக்கும் இடையே சிறிதுநேரம் நேரடி மோதல் இடம்பெற்றது. சுமார் ஐம்பது வரையிலான பென்ஷன் பெறச் சென்ற வயோதிபர்களின் பாதுகாப்புடன் இராணுவத்தினர் சிவில் உடையிலும், சாதாரண உடையிலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்துகொண்டு வெளியே வந்தார்கள். பொலிஸ் நிலையத்திற்கு அண்மையிலுள்ள பாலத்தின் அருகே இவர்கள் வந்தபோது 'புளொட்' இயக்கப் போராளிகள் முதலில் ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். இதனால் பென்ஷனியர்கள் நிலத்தில் விழுந்து படுத்துவிட்டதாகவும், அதையடுத்துப் 'புளொட்' இயக்கத்தினர் இராணுவத்தினரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து இருதரப்பினரிடையேயும் சிலநிமிட நேரம் நேரடித் துப்பாக்கிச் சமர் இடம்பெற்றது. இம்மோதலில் 'புளொட்' போராளி ஒருவர் காயமடைந்துள்ளார். 'புளொட்' இயக்கத்தினரின் தாக்குதலால் இரண்டு இராணுவத்தினர் படுகாய —4ஆம் பக்கம் பார்க்க

Registered as a Newspaper in SriLanka. விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 3 29-8-86 வெள்ளி (ஆவணி 13 துல்ஹஜ 22) முழக்கம் 206

# ஒப்பந்தம் இல்லை! பேச்சுவார்த்தை இன்றுடன் முடியும்

கூட்டணிக்கும் அரசாங்கத்துக்குமிடையேயான பேச்சுவார்த்தைகள் எந்த முடிவையும் காணுமலேயே இன்றுடன் முடிவடைகின்றது.

"எந்தவொரு ஒப்பந்தமும் இன்றைய பேச்சுவார்த்தையின்பின்னர் ஒப்பமிடப்படமாட்டாது; அதற்கான ஒரு தேவை இப்போதைக்கு உருவாகுமென்று தாங்கள் கருதவில்லை" என்றும் கூட்டணிக் குழுவின் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்றிரவு தெரிவித்தார்.

நேற்றைய பேச்சுவார்த்தை காலையில் ஜனுதிபதியுடனும், அமைச்சர் காமினி திஸ்ஸநாயக்காவுடனும் தனித்தனியாக நடத்தப்பட்டது.

பின்னர் மாலையிலும் பேச்சுக்கள் இடம்பெற்றன.

இன்று காலையும் பின்னர் மாலையும் பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெறும்.

இன்றிரவு அல்லது நாளைக் காலை சென்னைக்குப் பயணமாகும் தங்களால் இரண்டு வார கால கொழும்புப் பேச்சுத் தொடர்பான அறிக்கை ஒன்று புதுடில்லி அதிகாரிகளிடம் அடுத்தவாரம் சமர்ப்பிக்கப்படுமெனவும் திரு. அமிர்தலிங்கம் மேலும் சொன்னுர்.

## இளைஞனைக் கொலை செய்து தலைகீழே தொங்க விட்டனர்

(வவுனியா)

வவுனியா யாழ். வீதியில் பறநாட்டுக் கண்டல் என்ற இடத்தில் நேற்று காலை இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் பலியானுர். இந்த இளைஞர் மற்றொரு இளைஞருடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போதே இச்சம்பவம் நடைபெற்றது.

கொல்லப்பட்ட இளைஞனின் சடலம் சம்பவம் நடந்த வீதியோரத்தில் இருந்த மரமொன்றில் இராணுவத்தின —4ஆம் பக்கம் பார்க்க

## வெளிநாட்டு நிருபர்கள் நாளை யாழ். வருகின்றனர்

வெளிநாட்டுப் பத்திரிகைகள், செய்தி நிறுவனங்களின் நிருபர்கள் குழு ஒன்று நாளை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

தேசிய பந்தோபஸ்துஅமைச்சர் விடுத்த அழைப்பை ஏற்று இவர்கள் இங்கு நடைபெறுபவைகளை நேரில் காண்பதற்கு வரவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களில் பெரும்பான்மையானவர்களும் கோட்டைக்குள் தங்கியிருக்காமல், வெளியே வந்து ஹோட்டல்களில் தங்கியிருந்து ராணுவத்தாக்கு —4ஆம் பக்கம் பார்க்க

## ஸ்ரீமாவோ நிபந்தனை

ரூபவாஹினி தொலைக்காட்சியில் தோன்றி மாகாணசபை பற்றி நேரடியாக விவாதிக்க ஜனுதிபதி ஜெயவர்த்தன முன் வருவாரானுல் தான் தொலைக்காட்சியில் தோன்ற தயாராக இருப்பதாக ஸ்ரீமாவோ பண் —4ஆம் பக்கம் பார்க்க

## மாங்குளத்தில்....

நேற்று காலை மாங்குளத்திலிருந்து கிளிநொச்சி முகாமை நோக்கி நடைபவனியாகவும் கவச வாகனங்களிலும் வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் 'சிலண்டர்' —4ஆம் பக்கம் பார்க்க

★ கோட்டைதாக்குதல் காரணம்

## வேம்படி, சென்றல் திறக்கப்படாது!

அடுத்த மாதம் முதலாம் திகதி மூன்றும் தவணை ஆரம்பமாகும்போது வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி என்பன திறக்கப்படமாட்டாதென யாழ். கல்விப் பணிப்பாளர். இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக யாழ். கோட்டை முகாமில் இருந்து இடம் பெறும் ஷெல் தாக்குதல்களினுல் இப்பாடசாலைகள் தொடர்ச்சியாக சேதம் அடைந்து வருவதாலும் இங்கு பிள்ளைகளை பெற்றேர் அனுப்ப அஞ்சுவதாலும் இவ்வாறு அறிவிக்கப்படுகிறது.

இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளதால் இப்பாடசாலைகளை ஆரம்பிப்பது பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

## இரண்டு ராணுவம் காயம்

திருமலை மங்கிபிரிஜ் என்ற இடத்தில் தீவிரவாதிகளினுல் புதைத்து வைக்கப்பட்ட கண்ணிவெடியொன்று இரா —4ஆம் பக்கம் பார்க்க

'ஷெல்' தாக்குதலிலிருந்து

## மத்திய கல்லூரி அதிபர் மயிரிழையில் தப்பினுர்

(வண்ணுர்பண்ணை)

யாழ். மத்திய கல்லூரியின் மீது கோட்டை ராணுவத்தினர் நேற்றுமுன்தினம் 'ஷெல்' தாக்குதல் மேற்கொண்டபோது கல்லூரியில் நின்ற அதிபர் திரு. பாலசுந்தரமும், உப அதிபர் திரு. கந்தசாமியும் மயிரிழையில் உயிர் தப்பினுர்கள்.

இவர்கள் நின்ற இடத்திலிருந்து சிறிது தூரத்திலேயே ஷெல் விழுந்து வெடித்துச் சிதறியது. இச்சம்பவத்தில் நல்லூரைச் சேர்ந்த கல்லூரி அலு —4ஆம் பக்கம் பார்க்க

புலிகள் மீண்டும் எச்சரிக்கை

## சட்டவிரோத மின் பாவனை தமிழ் பகுதிக்கே ஆபத்து!

சட்ட ஒழுங்கு விதிகளுக்கு முரணுன மின் இணைப்புக்களினுல மின் உபகரணங்கள் சேதமாகி முழுப் பிரதேசமும் இருளில் மூழ்கும் அபாயத்தை தடுக்க சகலரும் ஒத்துழைக்க வேண்டும் என விடுதலைப் புலிகளினுல் நேற்று விடுக்கப்பட்ட அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான மின் இணைப்புக்களினுல் மின் உபகரணங்கள் சேதமடைவதோடு —4ஆம் பக்கம் பார்க்க

இன்று

ஈழமுரசுடன் மாலைமுரசு

இதழை கேட்டு வாங்குங்கள்

அடக்க விலை ரூபா 2/-

## இரண்டு லெப்டினன்டுகளையும் இன்ஸ்பெக்டரையும் சுட்டுக் கொன்றபின் ராணுவ சிப்பாய் தற்கொலை

(திருமலை)

இரண்டு இராணுவ லெப்டினன்டுகளும், பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் ஒருவரும் கோபங்கொண்ட ராணுவச் சிப்பாய் ஒருவரினுல் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதனையடுத்து அந்தச் சிப்பாயும் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டார். பாதுகாப்பு வட்டாரங்களை பெரும் பரபரப்புக்குள்ளாக்கிய இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு நிலாவெளி கூட்டுமுகாமில் இடம்பெற்றது.

சுட்டுக்கொல்லப்பட்டவர்கள் லெப்டினன்ட் கமகே, லெப்டினன்ட் சமரக்கோன், சப் இன்ஸ்பெக்டர் உடுவத்த ஆகியோர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களைச் சுட்டபின்னர் தற்கொலை செய்தவர் சிப்பாய் ஏ. சி. பெர்ஞன்டோ ஆவார்.

தொடர்ச்சியாக ஓய்வின்றிப் பணியாற்றுமாறு பெர்ஞன்டோ பணிக்கப்பட்டதாலேயே அவர் கோபம் கொண்டு மூவரையும் சுட்டதாகக் கூறப்படுகின்றது.

ராணுவத்தளபதி ஜெனரல் நளின் செனிவிரத்தின நிலாவெளிக்குச் சென்று ஸ்தலவிசாரணை நடத்தினுர். இக் கொலைகள், தற்கொலை தொடர்பாக மாஜிஸ்டிரேட் விசாரணையும் நடைபெற்றது.

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா

★ டென்மார்க்

★ ஜேர்மனி

★ சவூதி அரேபியா

கனடா, டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் உங்களை எதுவித இடையூறுகளுமின்றி நேரடியாக அழைத்துச் செல்வார்.

சவூதி அரேபியாவுக்கு மேசன், தச்சு, வீதி திருத்தம், விவசாயம் தொழிலாளர் போன்ற பதவிகட்கு உடன் அனுப்பி வைக்கப்படும். செல்ல விரும்புவோர் 6 படம், பாஸ்போட் என்பவற்றுடன் உடன் தொடர்பு கொள்ளவும். பாஸ்போட், பொண்ட் ஆகியனவும் செய்து தரப்படும்.

தீவுப் பகுதி மக்களின் நலன்கருதி எமது கிளை ஸ்தாபனம் ஒன்று ''ஒமேகா ரவல்ஸ் அன் ரூர்ஸ்'' என்னும் பெயரில் வேலணை, வங்களாவடியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

தொடர்பு:
பஸ் வழி இல;-
764, பலாலி வீதி,
கோண்டாவில்.

**N. BALA**
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

ஒமேகா ரவல்ஸ் அன் ரூர்ஸ்
வங்களாவடி சந்தி, வேலணை.

B/1490

## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க்,

★ சவூதி அரேபியா

1. டென்மார்க் செல்ல விரும்புவோருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது முகவர் உங்களை டென்மார்க்கிற்கு நேரடியாக அழைத்துச் செல்வார். செல்ல விரும்புவோர் உடனடியாக எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

2. சவூதி அரேபியா செல்ல விரும்புவோருக்கு Janitors (கிளீனர்), Painters for Buildings (கட்டடத்திற்கான பெயின்ரர்), Electricians Building (எலெக்ரிஷன்ஸ்), Masons (மேசன்), Shutring Carpent rs (காப்பென்ரர்), Plumbers (பிளம்பர்) Gardeners (விவசாயத் தொழிலாளர்)

ஆகிய உடனடி வேலைவாய்ப்புகள் எம்மிடம் உண்டு. 21 வயதிற்கு மேற்பட்டோர் 10 படங்களுடனும், பாஸ்போட்டுடனும் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

3. யூனிவர்சிற்றி கிளீனர், ஆஸ்பத்திரி கிளீனர்.

வேலை வாய்ப்புகளுக்கு 25 வயதிற்கு மேற்பட்டோர் 15 படங்களுடனும், பாஸ்போட்டுடனும் உடன் தொடர்பு கொள்ளவும். (Open Visa)

தொடர்புகொள்ள வேண்டிய முகவரிகள்:

**T. இந்திரநாதன்**

''சற்குண வாசா''
சோதி லேன், கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.
பஸ் வழி இலக்கம்: 769.

96, கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

R/25363

## வெளிநாட்டு பிரயாண ஒழுங்கு வேலைவாய்ப்பு விசாவுடன்

அபுதாபி: பாம் தொழிலாளர், மேசன், தச்சுத் தொழிலாளர், பிளம்பர் நேரடியான பிரயாணம்

குவைத்: ஓயில் கம்பெனி உதவியாளர்கள். விரைவான பயண ஒழுங்கு.

சவூதி: ஹோட்டல் பணியாட்கள் (Saudi Catering) Cook Helpers, உபசரிப்பாளர், ஆஸ்பத்திரி பெண் பணியாட்கள்.

ஈருக்: நிர்மாண வேலைத்துறையினர், விமான நிலைய கிளீனேஸ் பெண்கள்.

வீட்டுப் பணிப்பெண்களாக செல்ல விரும்புவோர் நாடுகளை தெரிவு செய்யலாம்.

பிரயாண ஒழுங்குகள் சரியான ஒப்பந்தத்துடனும் உத்தரவாதத்துடனும் செய்யப்படும்.

**R. K. பரமசுவாமி**
ஆஸ்பத்திரி லேன்,
இணுவில் மேற்கு,
இணுவில்.

R/25361

★★★★★★★★★★

## பிறந்தநாள் வாழ்த்து

★★★★★★★★★★

❀ வட்டுக்கோட்டை மேற்கு, கணேஸ்வரன் ஜீவிதமலர் தம்பதியின் மகன் லதீபன் இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❀ புதுக்குடியிருப்பு, பரமராசா கலாநிதி தம்பதியின் மகள் கார்த்தியாயினி இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❀ நல்லூர் கோவில் வீதி, நடராஜக் குருக்கள் இராசலெட்சுமி தம்பதியின் மகன் கௌரிசங்கர் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

## மட்டுநகருக்கு பஸ் சேவை

அரசாங்கப் பாடசாலைகள் அடுத்தவாரம் ஆரம்பமாகவுள்ளதால் ஆசிரியர், மாணவர்களின் நன்மைகருதி இன்று வெள்ளிக்கிழமை காலை யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு பஸ்சேவை ஒன்றை வடபிராந்திய போக்குவரத்துச்சபை நடத்தவுள்ளது. காலை ஐந்து மணிக்கு யாழ். பஸ் நிலையத்திலிருந்து இந்த பஸ் புறப்படும்.

## இணைப்புக் குழு 31-ல் கூடும்

பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழுக்கூட்டம் 31-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் நடைபெறும். இக்கூட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இணைப்புக் குழுவின் அழைப்பாளர் திரு. ச. சிவானந்தராசா கேட்டுள்ளார்.

## நாளை திறப்பு விழா

(சுன்னாகம்)

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கிளை விற்பனை நிலையம் புன்னாலைக்கட்டுவன் தெற்கில் நாளை சனிக்கிழமை உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கத்தினால் திறந்து வைக்கப்படவிருக்கின்றது. தலைவர் திரு. சி. குமாரவேல் தலைமையில் நடைபெறவிருக்கும் இத்திறப்பு விழா வைபவத்தில் தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. சிவமகாராசாவும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்ளவிருக்கிறார்.

## இன்று

(சரசாலை)

சாவகச்சேரி சித்திவிநாயகர் கலைஅரங்குத் திறப்புவிழாவும், பத்தாவது ஆண்டு விழாவும், இன்று வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணிக்கு உப்புக்கேணி வீதியில், திரு. சு. பு. கணபதிப்பிள்ளையினால் திறந்து வைக்கப்படவுள்ளது. திரு. வே. இராசதுரை, திரு. க. துரைராஜா (உதவி அரசாங்க அதிபர்), திரு. த. நவரத்தினராசா (செயலாளர், நகரசபை) முதலானோர் வாழ்த்துரை வழங்குவர்.

## A/L 87

தூயபிரயோக கணிதம்

பகல்நேர வகுப்பு:

ஆரம்பம்: 5-9-86

10-30 : காவிகள்
11-45 : அட்சர கணிதம்

ஆசிரியர்: ரவிமோகன்

யாழ்ப்பாணம்.

(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

R/25352

## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க், ★ கனடா.

(வாரத்துக்கு இருமுறை)

எமது முகவர் குறுகிய காலத்துக்குள் அழைத்துச் செல்கிறார்,

**சவூதி அரேபியா, அபுதாபி** ஆகிய நாடுகளுக்கு

ஹாபர் கிளினஸ், பிளாஸ்ரிக் கொம்பனி, ஹோட்டல், ஆகியவற்றிற்கு குறுகிய காலத்துக்குள் பிரயாண ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகிறது. உடன் தொடர்பு கொள்ளவும்.

பாஸ்போட், பொண்ட் ஆகியவையும் செய்து கொடுக்கப்படும்.

V. அம்பிகைபாகன்
முத்தட்டுமட லேன்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

**N. சிவஞானம்**
மகாவித்தியாலய அருகாமை,
ஏழாலை மேற்கு,
ஏழாலை.

R/25351

## மத்திய கிழக்கில் உடனடி வேலைவாய்ப்பு ஒழுங்குகள்

1. யோர்தான்—யோர்தான் அரசினால் பரிபாலிக்கப்படும் விமான நிலையம், ஆஸ்பத்திரி, பாடசாலை முதலிய நிறுவனங்களில் சுத்திகரிப்பாளர் (CLEANERS) பதவிகள். வயதெல்லை:-18-35

2. சவுதி அரேபியா—SAUDI CATERING COMPANY யில் பொது உதவியாளர் (GENERAL HELPERS) பதவிகள். வயதெல்லை:-20-40

மேற்படி நாடுகளுக்கு நியாயமான, குறைந்த கட்டணங்களில் துரிதமான பயண ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. விபரங்களுக்கு 29 ம் திகதிக்கிடையில் என்னுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

**எஸ். அன்ரன் முத்துக்குமரன்**

சந்திக்கும் நேரங்கள்:-

காலை 10.00—மாலை 2.30 மணிக்கிடையில்.
119 1/1, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(மைலன்ட் கட்டிட மேல்மாடி, புத்தகசாலை அருகே)

மாலை 6.00 மணிக்குப் பின்:-
வேளாங்கண்ணி மாதா கோவில் ஒழுங்கை,
கரம்பொன் தெற்கு, ஊர்காவற்றுறை.

R/25356

## முக்கிய அறிவித்தல்

### மகாதேவா ஜோதிடம்

நான் எழுதியதாக சில கையெழுத்துப்பிரதிகள் உலாவுகின்றன. இதில் சில திகதிகளைக் குறிப்பிட்டு அத் திகதிகளில் சில முக்கிய சம்பவங்கள் நடைபெறுமென கிரக நிலைகளை ஆதாரம் காட்டி எழுதப்பட்டுள்ளது. இவைகள் என்னால் எழுதப்படவில்லை. இவற்றில் கூறப்படும் விடயங்களுக்கு நான் பொறுப்பாளியுமல்ல. நான் எனது வெளியீடான மகாதேவா ஜோதிடப் பத்திரிகையிலும், தினசரிப் பத்திரிகைகளிலும் வெளியிடாத எவ் விஷயத்தையும் எனது ஆதரவாளர்களாகிய மக்கள் நம்ப வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றேன்,

இ. மகாதேவா

140, செல்லர் வீதி,
கல்வியங்காடு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

R/25362

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்

★ ஜேர்மனி ★ சவூதி அரேபியா

கனடா, டென்மார்க், ஜேர்மனி செல்ல விரும்புவோருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது முகவர் உங்களை கனடாவிற்கு நேரடியாக அழைத்துச் செல்வார் செல்ல விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

சவூதி அரேபியாவுக்கு விவசாய தொழிலாளர் (Labourers) மேசன், தச்சுத் தொழிலாளர் எலெக்றிசன்ஸ் வேலைக்குச் செல்ல விரும்புவோர் உடனடியாக பாஸ்போட், 6 படங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

**M. முருகையா,**
குப்பிளான் சந்தி,
குப்பிளான்.

B/1489

ஈழமுரசு

### உதய சிந்தனை

எதேச்சதிகாரமாக நடக்கும் அரசன் மதம் கொண்ட யானை போல மனம் போன போக்கில் இஷ்டப்படி திரிவான். ஆசவே அவன் படுகுழியில் விழுந்த போது அதற்குத் தன் குற்றத்தை உணராமல் வேலைக்காரனையே குறை கூறுவான்.

—பஞ்சதந்திரம்.

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 22437

## இதய ஒலி

29-8-86 வெள்ளிக்கிழமை (அக்ஷய) ஆவணி 13

# கோட்டைக்கு வெளியே வந்து பார்த்தால்...

அரசாங்கத்துக்கும் கூட்டணிக்குமிடையேயான ஆறும் சுற்றுப் பேச்சுவார்த்தை இன்றுடன் முற்றுப் பெறுகின்றது.

எந்தவொரு முடிவையும் காணாது, ''வெற்றி தோல்வியை பின்னர் நிச்சயிக்கும்'' ஒரு பேச்சுவார்த்தையாக இது அமைகின்றது.

கட்டம் கட்டமாக, சட்டம் சட்டமாக, நுணுக்கம் நுணுக்கமாக, அங்கம் அங்கமாக இரு வாரங்களாக பேச்சுவார்த்தை நடத்தியும் எந்தமுடிவுக்கும் வரமுடியாத நிலை இருபகுதியினருக்கும் ஏறபட்டுள்ளது.

சட்டம், ஒழுங்கு, காணி, மொழி, அதிகாரபரவல் என்றெல்லாம் கூறப்பட்டு வந்த போதிலும், எதிலுமே ஒரு இறுதி இலக்கை அடைய முடியவில்லையென்றால், இனப்பிரச்னைக்கு எபபோதுதான் தீர்வுகாண முடியும்?

1983 ஜூலைச் சம்பவங்கள் முடிந்து மூன்றரை ஆண்டுகள் ஆகப்போகின்றன.

இதற்கிடையில் சர்வகட்சி மாநாடு நடைபெற்றது.

அரசியல் கட்சிகள் மாநாடு நடைபெற்றது.

கூட்டணிக்கும் அரசாங்கத்துக்குமிடையே பேச்சுக்கள் நடைபெற்றது.

திமபுவிலும், டில்லியிலும் பேச்சுக்கள் நடைபெற்றன.

இவைகளால் எந்தவொரு தீர்வையும் காண முடியவில்லை.

மறுபுறத்தே ஆயுதப் போராட்டம் நடைபெறுகின்றது.

ஆயுதப படையினரும், போராளிகளும் பல நூறறுக் கணக்கில் மரணமாகியுள்ளனர்.

இதனைத் தவிர அப்பாவித் தமிழர்கள் ஆயிரக் கணக்கில் படுகொலை செய்யப்படுகின்றனர்.

ஆயுதப படையினரின் அட்டூழியச் செயல்களே பல தடவை பேச்சுவார்ததை முறியக் காரணமாகவிருந்தது.

திம்புப் பேச்சுக்களை இடைநிறுத்தி, நிபநதனையிட வேண்டிய நிர்ப்பந்தம் போராளிகளுககு ஏற்பட்டமைக்கு படையினரின் தாககுதலே மூலமாக இருந்தது.

இப்போது கூட்டணியினரின் பேச்சுக்களைக் குழப்பும் வகையில் அகோரமான தாககுதல்கள் யாழ்பபாணததில நடத்தபபட்டன.

ஒரு வயதுக் குழந்தை, பதின்மூன்று வயது மாணவன், அறுபது வயது மாது, மணவாளக் கோலததுடன் மணமகன், வஙகி மனேஜர், பத்திரிகை விற்பனை நிலைய பெண், நிறுவன அதிபர் என்று பலரபபட்டவர்களையும இராணுவததினர் கடநத சில நாட்களில கொன்று குவித்துள்ளனர்.

நகரின கேநதிர நிலையஙகள், பிரதான பாடசாலைகள் மோசமாகத் தாககுதலுக்குள்ளாகியுள்ளன.

இதனால ஏறபட்டுள்ள பாதிப்பு பல லட்சக் கணக்கான ரூபா பெறுமதியுடையது.

இவைகளை கூட்டணித் தலைவர்கள் ஜனாதிபதியின் கவனத்துக்குக கொண்டு வந்தனர்.

ஒரு நாட்டின் பொறுபபு வாய்ந்த தலைவரிடமிருந்து நீதியான பதில் கிடைக்கவில்லை.

உண்மையை அறிநது கொள்வதற்கான முயற்சியை அவர் எடுத்ததாகக்கூடத் தெரியவில்லை.

அதறகு மாறாக, கூட்டணித் தலைவர்களை கோட்டை முகாமுக்கு விஜயம் செய்யுமாறு இராணுவ அதிகாரிகளால் அழைபபு விடுக்கப்பட்டுள்ளது.

கோட்டைக்குள் வந்தால் தீவிரவாதிகள் நடத்தும் தாக்குதலை நேரில் அறியலாம்.

அதே போல வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களையும் யாழ்ப்பாணம் சென்று கோட்டையில தங்கியிருந்து பார்க்கலாமென தேசிய பந்தோபஸ்து அமைச்சு அழைபபு விடுததுள்ளது.

உண்மை நிலையை அறிவதானால் கோட்டைக்கு வெளியே சுதந்திரமாகச் சென்று நிலைமையைப் பார்வையிட இவர்களை அரசாங்கம் அனுமதிக்க வேண்டும்.

பொறுப்பு வாய்ந்த சிங்களத தலைவர்களும் இவர்களுடன் வந்து கோட்டைக்கு வெளியே இடம்பெற்ற தாககுதலகளைப் பார்வையிட அனுமதிக்க வேண்டும்.

கோட்டைக்குள்ளிருந்து பார்ப்பதால் உண்மையை அறிய முடியாது என்பதை அனைவரும் அறிவர்.

★ திங்களன்று ஹராரேயில் அணிசேரா நாடுகள் இயக்கத்தின் உச்சிமாநாடு

# சர்ச்சைக்குரிய பல்வேறு விடயங்கள் மீது விவாதம்!

(ஹராரே)

எதிர்வரும் திங்கட்கிழமை ஸிம்பாப்வே தலைநகரான ஹராரேயில் நடைபெறவுள்ள அணிசேரா நாடுகளின் எட்டாவது உச்சி மாநாட்டில் மேற்காசிய விவகாரம், பலஸ்தீனியச் சிக்கல், இந்துமா கடலில் அதிகரித்துவரும் வல்லரசுகளின் இராணுவ நடமாட்டம், தென்னாபிரிக்க இனவெறிப் போக்கு உட்பட பல்வேறு முக்கியத்துவ விடயங்கள் விரிவாக ஆராயப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இம்மாநாட்டில் ஐம்பது நாடுகளின் தலைவர்கள் சமுகமளிப்பர் என்று ஸிம்பாப்வே வெளிநாட்டமைச்சர் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

எழுபது நாடுகளின் பிரதிநிதிகளும் இம்மாநாட்டில் கலந்து கொள்வர் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

இதற்கு முன்னோடியாக அணிசேரா நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் இங்கு கூடி விஷயாலோசனைக் கூட்டம் ஒன்றினை நடத்தியுள்ளனர்.

மூன்றாவது மண்டல நாடுகளின் பாதுகாப்புப்படை ஒன்று ஆபிரிக்க முன்னணி நாடுகளுக்குத் தேவை என்ற யோசனையைப் பாரதப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி வெளியிட்டுள்ளாளார்.

தான் மூன்று வருடங்களாக வகித்து வந்த இவ்வியக்கத்தின் தலைமைப் பொறுப்பை திரு. ராஜீவ் காந்தி ஸிம்பாப்வே பிரதம மந்திரி தி. றொபேட் முகாபேயிடம் கையளிக்கவுமுள்ளார்.

தென்னாபிரிக்க விவகாரம் உட்பட பல்வேறு முக்கிய பிணக்குகளில் இவ்வியக்கம் ஆற்றியுள்ள பணிகள் தொடர்பான விசேட பிரகடனம் ஒன்றும் மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

## ஊழல் குற்றச்சாட்டு எதிரொலி

# சோவியத் மந்திரிக்கு மரணதண்டனை விதிப்பு

(மாஸ்கோ)

சோவியத் யூனியனின் உஸ்பெகிஸ்தானி மாநில மந்திரி ஒருவருக்கு ஊழல் குற்றச்சாட்டின் பேரில் மரணதண்டனை வழங்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

புள்ளி விபரங்களில் மாற்றம் செய்தது, மோசடிகளுக்கு உதவியது, லஞ்சம் பெற்றது முதலான குற்றச் சாட்டுகளின் பேரில் இவர் மீது விசாரணை நடைபெற்றது.

மேற்படித் தகவல்களை 'டாஸ்' செய்தி ஸ்தாபனம் வெளியிட்டுள்ளது.

# அகதிகளின் வருகையைக் குறைப்பதென மேற்கு ஜேர்மனி அரசாங்கம் தீர்மானம்

(பொன்)

மேற்கு ஜேர்மனியில் அகதிகளின் வருகையைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக ஜனாதிபதி திரு. கோல் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

பொருளாதாரத்தை நோக்கமாகக் கொண்டு வருவோரின் வருகையை அவர் இக்கட்டத்தில் சுட்டிக்காட்டினார்.

தமது இத்தீர்மானம் அரசியல் கருத்து வேறபாடுகள் காரணமாக மேற்கொள்ளப்பட்டது அல்ல என்றார் அவர்.

குறிப்பாக லெபனான், சிரியா, கானா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்தோர் இங்கு வருகையில் பெற்றிருக்க வேண்டிய விஸா விபரங்களை அவர் தெளிவு படுத்தினார்.

இவ்வருடத்தில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான அகதிகள் இங்கு வந்துள்ளனர் என்றும் அவர் சொன்னார்.

இவர்களில் பதினைந்து வீத மானோரே அரசியல் ரீதியில் துன்புற்று தஞ்சம் கோரியுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

# பிரிட்டனுக்கு அமெரிக்காவின் 18 ஜெட் விமானங்கள்

(வாஷிங்டன்)

கடந்த ஏப்ரல் மாதம் லிபியா மீது தாக்குதல் தொடுக்கப் பயன்படுத்தப்பட்ட ரகத்தைச் சேர்ந்த பதினெட்டு ஜெட் விமானங்களை அமெரிக்கா பிரிட்டனுக்கு வழங்கவுள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக பிரிட்டிஷ் அதிகாரிகள் தகவல் தருகையில் ஆறுமாதங்களுக்கு முன் நடைபெற்ற நேட்டோ நாடுகளின் இராணுவ முயற்சிக்கு இவை உபயோகிக்கப்படும் என்று கூறினர்.

இவ் வேளை லிபியா மீது அமெரிக்கா மற்றொரு தாக்குதலை நடத்தும் என்று தாம் கருதவில்லை என்றும் அவ்வதிகாரிகள் தெரிவித்தனர்.

லிபியா மீதான தாக்குதலின் போது அமெரிக்கா பிரிட்டிஷ் தளங்களைப் பயன்படுத்தியிருந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.


உ

முருகா

## நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம்-1986

இன்று 20-ம் திருவிழா

(காலை சந்தானகோபாலர் உற்சவம் — மாலை கைலாசவாகனம்)



காவடிச் சிந்து

கோயில் மணி ஓசையிதோ வேலேதவ முருகனுமைக்
கூப்பிடுகுது அன்பரெல்லாம் கூடுவீர்! —விழாப்
பார்த்திடலாம் நல்லைநகர்க் கோடுவீர்!
தாயரேந்து இன்றுகருப் பூரதீப ஜோதி காண
சஞ்சலங்கள் தூரஓடிப போகுமே—நம்
நெஞ்சகங்கள் கந்தன்கோயில ஆகுமே!

—சோ. ப.

B/1449

எந்தை கந்தவேளைப பிரார்த்தித்துப பிரசுரிபபவர்கள் — 'ரெபாகுளோப'

ஈழமுரசு

## யார் இந்த ஒற்றர்கள்?

நெல்லியடி பகுதியில் மோட்டார்சைக்கிளில் வந்த இருவரால் ஒன்பது வயது சிறுமி ஒருவர் கடத்தப்பட்டதையடுத்து இப்பகுதி மக்களிடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இப்பகுதியிலுள்ள ஒழுங்கையொன்றில் சென்றுகொண்டிருந்த சிறுமி ஒருவரை மோட்டார்சைக்கிளில் வந்த இனம் தெரியாதோர் பலவந்தமாக கடத்திச் சென்று அவரை சித்திரவதைப்படுத்தினராம். இப்பகுதியில் போராளிகளின் முகாம் எங்குள்ளது, போராளிகள் என்னமாதிரி வாகனத்தில் இப்பகுதியால் செல்கின்றவர்கள் என்றெல்லாம் சிறுமியிடம் கேட்கப்பட்டதாம். சிறுமி மிகவும் பீதியடைந்து மயக்கநிலையையடைந்ததையடுத்து அவர் அந்த இரு ஒற்றர்களாலும் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நாளை மாலை

# 599 பேருக்கு பட்டமளிப்பு; கைலாசபதி கௌரவ இலக்கிய கலாநிதியாகிறார்

யாழ். பல்கலைக்கழகத்தின் ஏழாவது வருடாந்தப் பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நாளை பிற்பகல் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 2.15 மணிக்கும், 4 15 மணிக்குமாக இரண்டு அமர்வுகளாக நடைபெறும் இப் பட்டமளிப்பு விழவில் முதல்அமர்வில் கலைப்பீடப்பட்டதாரிகளுக்கும், இரண்டாம் அமர்வில் மருத்துவ விஞ்ஞான பீடப்பட்டதாரிகளுக்கும் உரிய பட்டங்கள் வழங்கப்படும்.

இம்முறை மொத்தமாக 599 பேர் பட்டங்களைப் பெறுகின்றனர்கள். இவர்களில் 520 பேர் நேரில் பட்டங்களைப் பெற்றுக் கொள்வார்கள்.

இம்முறை மூன்று பேர் கௌரவ பட்டங்களைப் பெறுகிறார்கள். காலஞ்சென்ற பேராசிரியர் க. கைலாசபதி இலக்கியக் கலாநிதி என்னும் கௌரவப் பட்டத்தையும், பேராசிரியர் இரகுநாதர் கனகசுந்தரம் விஞ்ஞானக் கலாநிதி என்னும் கௌரவப்பட்டத்தையும், பேராசிரியர் ஆதர் ஏபிரகாம் ஹீவர் விஞ்ஞான கலாநிதி என்னும் கௌரவப் பட்டத்தையும் பெறுகிறார்கள்.

திரு. நாகராஜ ஐயர் சுப்பிரமணியம் அவர்கள் கலாநிதிப் பட்டம் பெறுகிறார். தமிழ்த் துறையில் செய்த ஆராய்ச்சியின் பொருட்டு இவருக்கு இப் பட்டம் வழங்கப்படுகின்றது.

இதைத் தவிர இருவருக்கு முதுமெய்யியல் மாணிப்பட்டமும், அறுவருக்கு முதுகலை மாணிப்பட்டமும், கல்வி டிப்புளோமா பட்டத்தை பத்துப் பேரும், கலைமாணிப்பட்டத்தை 236 பேரும், விஞ்ஞானமாணிப் பட்டத்தை 175 பேரும், மருத்துவ சத்திர சிகிச்சை மாணிப் பட்டத்தை44பேரும், தொழில் நிர்வாக விஞ்ஞான மாணிப் பட்டத்தை 31பேரும். வர்த்தக மாணிப்பட்டத்தை 67 பேரும், ஆயுள்வேத மருத்துவ சத்திர சிகிச்சை டிப்புளோமா பட்டத்தை மூவரும், இசை, நடன டிப்புளோமா பட்டத்தை 24 பேரும் பெறுகிறார்கள்.

இவற்றுடன் கலை, மருத்துவ, விஞ்ஞான பீடங்களைச்சேர்ந்த மாணவர்களுக்கான பரிசில்களும், புலமைப்பரிசில்களும் வழங்கப்படும்.

## பயணிகள் பஸ்களோடு ராணுவத்தினர் நடைபவனி

(வண்ணார்பண்ணை)

ஆனையிறவு முகாமைச்சேர்ந்த இராணுவத்தினர் யாழ். நகரிலிருந்து புறப்பட்ட பஸ், லொறிகளுடன் கிளிநொச்சி நோக்கி நேற்று நகர்ந்து சென்றனர். சுமார் பத்து கவச வாகனங்கள் சகிதம் நடைபவனியாகவே இவர்கள் சென்றனர்.

வவுனியாவிலிருந்து மாங்குளம் நோக்கியும் இராணுவத்தினர் பல கவசவாகனங்கள் சகிதம் நடைபவனியாக வந்தனர். யாழ்நகரிலிருந்து புறப்பட்ட தனியார் பஸ்ஸில் சென்ற பிரயாணிகள் கொழும்பு செல்வதற்கு ரயில் வண்டியை வவுனியாவில் பிடிக்க முடியாதுபோயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஸ்ரீமாவோ...

டாரநாயக்கா அறிவித்துள்ளார்

இருவரதும் விவாதம் சிங்களத்தில் இடம்பெறவேண்டும் என்றும், நேரடியாக ஒளிபரப்பாகவேண்டும் எனவும் அவர் மேலும் நிபந்தனை விதித்துள்ளார்.

### வெளிநாட்டு...

தல் நடைபெற்ற இடங்களைப் பார்வையிட விருப்பம் தெரிவித்துத் தேசிய பந்தோபஸ்து அமைச்சரிடம் அனுமதி கோரியுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

### மத்திய கல்லூரி...

வலக ஊழியரான தங்கராஜா தேவகுலநாயகம் (40) காலல் படுகாயமடைந்துள்ளார். கடமையின் நிமித்தம் இவர் கல்லூரியில் நின்றபோதே இச்சம்பவம் இடம்பெற்றது.

அதேவேளை கோட்டை முகாமிலுள்ள ராணுவத்தினர் நேற்றும் யாழ். மததிய கல்லூரியை நோக்கி பல தடவைகள் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டார்கள். இதனால் இக் கல்லூரியின் விஞ்ஞான ஆய்வு கூடம், சித்திர வகுப்பு அறை, சங்கீத அறை ஆகியன மோசமாகச் சேதமடைந்துள்ளன.

நேற்றுக்காலை சுமார் பத்தரை மணிமுதல் ஐந்து தடவைகள் 'ஷெல்'கள் யாழ். மத்திய கல்லூரியை நோக்கிக் கோட்டை ராணுவ முகாமிலிருந்து ஏவிவிடப்பட்டன. இவறறில் ஒன்றே கல்லூரி மேல்மாடியிலுள்ள நூலகத்தின் பின்புறமாகவுளள ஆய்வு கூடத்தையும், சங்கீத, சித்திர அறைகளையும் சேதமாக்கியது.

### பென்ஷன்கார ...

மடைந்தோ, கொல்லப்பட்டோ இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒருராணுவத்தினருக்குஇடையிலும், மற்றவருக்குக் கழுத்திலும் துப்பாக்கிச் சூட்டுக் காயமேற்பட்டதாகத் தெரியவருகிறது.

இதே வேளையில் பண்ணைப் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தால் தமிழீழ இராணுவத்தைச் சேர்ந்த போராளி ஒருவர் காயமடைந்துள்ளார். இதனையடுத்துத் தமிழீழ இராணுவத்தினர் கோட்டை இராணுவமுகாமை நோக்கி இரண்டு 'ஷெல்'களை ஏவிவிட்டதாகவும் தெரியவருகிறது.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 29-8-1986 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 22437

புலிகளின் தாக்குதலால்

## படகில் வந்த இராணுவம் திருப்பி அனுப்பப்பட்டது

(வல்வெட்டித்துறை)

நேற்று காலை பருத்தித்துறை இராணுவ முகாமுக்கு இராணுவததினரை ஏற்றிவந்த கடற்படை பிளாஸ்ரிக் படகின் மீது போராளிகள் மேற்கொண்ட தாக்குதலையடுத்து அப்படகு இராணுவத்தினரை இறக்காமலே திரும்பிச் சென்றது. நேற்றுக் காலை ஏழு மணிபோல் இச் சம்பவம் நடைபெற்றது.

கடலில் நிலை கொண்டிருந்த பீரங்கிக் கப்பலிலிருந்து பருத்தித்துறை இராணுவ முகாமுக்கு பிளாஸ்ரிக் படகில் இராணுவத்தினர் வந்துகொண்டிருந்தபோதே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இச் சம்பவத்தையடுத்து பீரங்கிக் கப்பலிலிருந்தும் பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்தும் ஷெல் தாக்குதலும் பீரங்கித் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டன.

விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட நேற்றைய தாக்குதலின்போது முகாமின் பாதுகாப்பு அரண் மீது நின்ற இராணுவ வீரர் ஒருவர் மரணமடைந்து அல்லது படுகாயமடைந்திருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. இச் சம்பவத்தின்போது புலிகளின்கிழக்குப்புற பாதுகாப்புஅரண் சேதமானது.

### இளைஞனைக்...

ரால் தலைகீழாக கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தது. இவருடன் வந்த மற்ற இளைஞர் காயங்களுடன் தப்பிவிட்டதாகவும் சொல்லப்படுகிறது. மோட்டார் சைக்கிள் இராணுவத்தினரால் கைபபற்றப்பட்டது.

### சட்ட விரோத ...

உயிர்ப் பலிகளும் ஏற்படுகின்றன. இவ்வாறான ஒழுங்கற்ற இணைப்புக்களால் தமிழ்ப் பகுதிகளில் பல அனர்த்தங்கள் ஏற்கனவே ஏற்பட்டுள்ளன.

இந் நிலையினை சகலரும் உணர்த்து இது விடயத்தில் மின்சார சபைக்கு கட்டுப்பட்டு அவர்களின் சேவை தொடர பரிபூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இதேபோல் மின்சாரசபை ஊழியர்களும்மக்களின் தேவைகளையறிந்து அவர்களுக்குரிய மின் விநியோகத்தை ஒழுங்கு விதிகளுக்கமய உடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இரண்டு ராணுவம்...

ணுவத்தினரால் மீட்டெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த கண்ணிவெடி மீட்கப்படும்போது ஏற்பட்ட விபத்தில் இரு இராணுவ உயரதிகாரிகள் காயமடைந்தனர். இவ்விருவரும் தற்பொழுது கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### மாங்குளத்தில்...

'கனன்சார்ஜ்' தாக்குதல்களை மேற்கொண்டனர். இத்தாக்குதலின்போது மூன்று இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டிருக்கலாமென விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளன. இதன் பின்னர் இரு ஹெலிகொப்டர்கள் தாக்குதல்களை மேற்கொண்டன.

## தாக்குதலுக்கு கிடைத்த வெற்றி

(வல்வெட்டித்துறை)

உடுத்துறை கடற்கரையில் நேற்றுமுன்தினமிரவு கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்ட நேரடி மோதலின் போது பல படைவீரர்கள் காயமடைந்ததாகவும், கடற்படையினரின் படகு சேதமடைந்ததாகவும் அறியப்படுகிறது.

கரையிலிருந்து சுமார் எழுபத்திஐந்து யார் தூரத்தில் இடம்பெற்ற இந்த மோதலின் போது புலிகளால் 'றம்போ எம். ஜி. 37' ரச ஆயுதம் பயன்படுத்தப்பட்டது. கடலில் நிலைகொண்டிருந்த கடற்படைக் கப்பலிருந்து படையினர் பிளாஸ்ரிக் படகில் கரையை வந்தடைந்த போது நடந்த இத்தாக்குதலையடுத்து பிளாஸ்ரிக் படகு சேதத்துடன் தாய்க்கப்பலை நோக்கி விரைந்து சென்று விட்டது.

## டீசல் கொள்ளை

நேற்று முன்தினம் முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவரப்பட்ட இருபத்து மூன்று பரல் டீசல் தேவிபுரம் என்ற இடத்தில் வைத்து இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## அட்டகாச குரங்குகள் சுடப்பட்டன

(வல்வெட்டித்துறை)

குடத்தனைப் பகுதியில் பல பெரிய குரங்குகள் அட்டகாசம் புரிவதாகவும், மக்களைத் துன்புறுத்துவதாகவும் பயிர்களை நாசம் செய்வதாகவும் விடுதலைப் புலிகளிடம் அப்பகுதி மக்கள் செய்துகொண்ட புகார்களை அடுத்து அப்பகுதிக்குச் சென்ற விடுதலைப் புலிகள் இரண்டு (சுமார் நாலு அடி உயரமுள்ள) குரங்குகளைச் சுட்டனர். அதில் ஒரு குரங்கு அவ்விடத்திலேயே இறந்துவிட்டது. ஒரு குரங்கு சூட்டுக் காயத்துடன் பிடிக்கப்பட்டது.

## அங்கு தாக்குதல் இங்கு கொள்ளை

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பெருமளவுபொருட்களுடன் வந்த 'கிளாஸ்ஹவுஸ்' நிறுவனத்திற்குச்சொந்தமான லொறி கிளிநொச்சிக்கு அண்மையில் வைத்து இனம் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டு அதிலிருந்த சுமார் முப்பதாயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இதற்கு முன்பாக இந்த லொறியை கடவத்தை பொலிஸ் நிலையத்தில் கடுமையாகச் சோதனையிட்ட பொலிஸார் லொறியின் சாரதியையும், கிளீனரையும் கடுமையாகத் தாக்கி அடித்ததாகவும், இவர்களை இனிமேல் கொழும்புக்கு வரக்கூடாதென எச்சரித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## முகாம் வருமாறு தாயாருக்கு அழைப்பு

உயர்கல்விக்காக நோர்வே செல்ல கொழும்புக்கு பஸ்ஸில் பயணம் செயதபோது ஆனையிறவில் கடந்தவாரம் கைது செய்யப்பட்ட அரியாலையைச் சேர்ந்த ஜெயந்தனின் தாயாரை பலாலி முகாமுக்கு வரும்படி ராணுவ உயரதிகாரி அறிவித்துள்ளார்.

இந்த இளைஞர் கைதானதும் உறவினர் முகாம் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டபோது தாம் அப்படி ஒருவரையும் பிடிக்கவில்லை என முதலில் அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து இவ்விளைஞரின் தாயார் இவர் கல்விகற்பதற்காக செல்வது பற்றிய விபரங்களை உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்ததையடுத்து இந்த அறிவிப்பு கிடைத்துள்ளது.

## பென்ஷன் மாற்றம்

தபாற் கந்தோர் மூலமாக வழங்கப்படும் ஆகஸ்ட் மாத ஒய்வூதிய கொடுப்பனவில் சிறிது மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இதன்படி 2-ம் திகதி செவ்வாய்க்கிழமை வழங்கப்படும் கொக்குவில் தபாற் கந்தோர் பென்ஷன் 3-ம் திகதி புதன்கிழமை வழங்கப்படும்.

## ராணுவத்தினர் "தனித்தவில்"

(வல்வெட்டித்துறை)

கடந்த இரவு நடுநிசி வேளையில் தொண்டமானாறு இராணுவ முகாமிலிருந்து சுமார் ஐந்து மோட்டார் ஷெலகள் மக்கள் வாழும் பகுதியை நோக்கி அடிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து சரமாரியான துப்பாக்கிவேட்டுக்களும் தீர்க்கபபட்டன. எதுவிதஎதிர்த் தாக்குதலும் நடைபெறுமலேயே இராணுவத்தினரால் இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தாக்குதலால் ஆடகள் அற்ற இரு வீடுகள் சேதமடைந்துள்ளன.

# மாலைமுரசு

★ பல்சுவை குடும்ப இதழ்

மாலை - 1 29 - 08 - 1986 வெள்ளி மலர் - 2


## மண்ணில் தெரியும் வானம்

காலனின் பார்வை பதிந்த விடத்தில்
  எழுந்து நின்றான் மானிடன் ஒருவன்:
"காலன் நானே உணர்வாய் நீயே
  மண்ணில் வாழ்க்கை முடித்தா வந்தாய்?

இனிய மதுவின் சுவை அறிந்தாயா?
  மதுவை மாந்தி மயங்கி நின்றாயா?
கனிய இதழ்க் கன்னியர் மடியில்
  கலக்கமின்றிக் கூடல் செய்தாயா?"

"மதுவை யறியேன் மாமிச மறியேன்
  மாதுவைத் தானும் கூடி யறிந்திலேன்."
"பாவி மானிடா, பயனற்ற பாவி
  பாரின் மடியில் [என்னதான்] செய்தாய்?"

"மதுவை மாதை விருப்பேன் அவமே
  கோயில் தோறும் வந்தேன் வலமே
தலங்க ளூடே செய்தேன் தவமே
  சொர்க்கம் வேண்டி வந்தேன் கணமே."

"வாராய் மானிடா நலமே வாராய்
  சொர்க்கத்தின் வாசல் இதுவே வாராய்
பாராய் மானிடா பயமின்றிப் பாராய்
  புண்ணிய பலனின் விளைவைப் பாராய்."


இந்திரன் அணைப்பில் கிடந்தாள் ரம்பை
  வசிட்டர் உடலில் ஊர்வசிப் பெண்ணாள்
சந்திரன் மடியில் கால்களைப் பரப்பி
  வருணனின் மார்பில் திலோத்தமை
      கிடந்தாள்."

மதுவை மாந்தி மங்கையர் அணைப்பில்
  மயங்கிக் கிடந்தனர் காமக் களியில்
"இதுவா சொர்க்கம் இதுவே மண்ணில்
  நிறையக் கிடந்ததே நானுணராமல்."

"பாவி மானிடா பயனற்ற பாவி"
  காலனின் விழிகளில் கனன்றது கனவே
"தாவி யோடிச் சேர்வாய் தாரணி
  மண்ணில் தெரியுது காண்பாய் வானமே"


கிளிநொச்சிக் கவிராயர்

ரூபா : 1/-



நாட்டியத் தாரகை செந்தூரி

# அத்திலாந்திக் சமுத்திரத்தில் அவதிப்பட்ட தமிழ் அகதிகள்




அத்திலாந்திக் சமுத்திரத்தில், நியூபவுன்லாந்து தீவுக்கு அப்பால், உயிர்க்காப்புப் படகுகளில் மரணப் போராட்டம் நிகழ்த்திக் கொண்டிருந்த 152 தமிழ் அகதிகள், கனேடிய மீனவரால் மீட்கப்பட்டுள்ளனர். கனடாவுக்கு அருகில், கடலிலிருந்து மீட்கப்பட்ட 152 இலங்கைத் தமிழரும் ஓராண்டு காலம் கனடாவில் தங்கியிருக்க அனுமதிக்கப்படுவார்கள் என கனடா குடி வரவுத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

முதலில் வெளிவந்த செய்திகளின் படி, இந்த 152 அகதிகளும், யூலைமாதம் 7 ஆம் திகதி, இந்தியாவின் துறைமுகம் ஒன்றிலிருந்து இரவு நேரத்தில் ஒரு கப்பலில் தமது பயணத்தை ஆரம்பித்தனர் என்றும், அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறியவர்கள் அவர்களிடமிருந்து 3000 டாலர் தொட்டு 5000 டாலர் வரை ஒவ்வொருவரிடமும் கட்டணமாகப்பெற்றுக் கொண்டனர் என்றும் தெரிய வந்தது. அவர்களைக் கப்பலில் ஏற்றி, ஆழ் கடலைக் கடந்து வந்த கப்பல், அத்திலாந்திக் சமுத்திரத்தில் இரு உயிர் காப்புப் படகுகளில் அவர்களை இறக்கி, அனுதரவாகக் கடலில் தத்தளிக்கவிட்டு விட்டு, விரைந்து மறைந்து விட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. இந்தக் கப்பல் சீன அல்லது கொரிய நாட்டுக் கப்பலாக இருக்கலாமெனச் சந்தேகிக்கப்பட்டது. ஆறு - ஏழு நாட்களாக அத்திலாந்திக் சமுத்திரத்தில் உணவுக்கும் நீருக்கும் தவித்து, உயிர்ப் போராட்டம் நடத்தியபின்னர் அவர்கள் மீட்கப்பட்டனர் எனத் தகவல்கள் வெளி வந்தன.

வட அத்திலாந்திக் சமுத்திரத்தில் அனுதரவான நிலையில் கைவிட்டு, அகன்று விட்ட சரக்குக் கப்பலைக் கண்டு பிடிக்க, கனேடிய விமானங்கள் தொடர்ந்து தேடுதல் நடாத்தின. அதேவேளை, மீட்கப்பட்ட அகதிகள் குறித்து விசாரணைகளை,கனடா குடிவரவுத்துறையினர் நடாத்தினர். 'இந்தியாவிலிருந்து கனடா செல்ல யூலை மாதம் 7 ஆம் திகதி, ஒவ்வொருவரும் தலா 30 ஆயிரம் ரூபா கொடுத்து, சீனக்கப்பல் ஒன்றில் ஏறியதாகவும், லொறி ஒன்றில் முதலில் ஏற்றிச் செல்லப்பட்டு, பின் ஆழ்கடலில் நங்கூரமிடப்பட்டிருந்தகப்பலில் ஏற்றப்பட்டதாகவும்இக்கப்பலில் மிகக் குறைந்தவசதிகளே இருந்ததாகவும், 35நாள் பயணத்தின்பின் அவர்கள் அத்திலாந்திக் சமுத்திரத்தில், ஆழ்கடலில், இரு உயிர்காப்புப் படகுகளில் இறக்கிவிடப்பட்டதாகவும் மீட்கப்பட்ட அகதிகளில் ஒருவரான நல்லையா விஜயநாதன் என்பவர் தெரிவித்தார். இச்சோகக்கதை பல்தேச மக்களையும் உருக்கி விட்டது.

1983 ஆம் ஆண்டு இலங்கையில் நிகழ்ந்த கொடிய இனக்கலவரமும், தமிழ்ப்பிரதேசங்களில்கூட தமிழ் மக்களது உயிருக்குப் பாதுகாப்பு இல்லை என்ற யதார்த்த பூர்வமான அச்சமும், இலங்கைத் தமிழரை நாடுவிட்டு அகதிகளாக ஓடவைத்தது. சொத்து சுகங்களைக் கைவிட்டு, அவர்கள் அனுதைகளாக அந்நிய நாடுகளுக்கு அரசியல் தஞ்சம் வேண்டி ஓடிச் சென்றுர்கள். 'இதுவரையில் இந்தியாவுக்கு ஏறத்தாழ ஒரு இலட்சம் தமிழர், அகதிகளாகச் சென்றுள்ளனர். மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இதுவரை காலமும் 50 ஆயிரம் தமிழர்கள் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர். இவர்களில் 22 ஆயிரம் பேர் மேற்கு ஜேர்மனியிலும், 19 ஆயிரம் பேர் பிரான்சிலும் தஞ்சம் கோரியுள்ளனர். இவர்கள் அனைவரும் 18 தொடக்கம் 35 வயதுக்குட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் கொழும்பிலிருந்துமொஸ்கோஊடாகமேற்கு ஜேர்மனிக்கும்மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் வந்தவராவர். தமிழ் அகதிகளுக்கு அகதி அந்தஸ்து வழங்க ஐரோப்பிய நாடுகள் கொள்கை அளவில் மதித்து வருகின்றன. மேற்கு ஜேர்மனி, நெதர்லாந்து, சுவீடன், பெல்ஜியம் போன்ற நாடுகளில் மிகச் சிலருக்கே அகதிகள் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. சுவிற்சர்லாந்தில் அகதிகள் அந்தஸ்து கோரி விண்ணப்பித்தோரில் 2 சதவீதமானவர்களது விண்ணப்பங்களே பரிசீலிக்கப்பட்டுள்ளன. இந்நிலையிலும் இலங்கையிலிருந்து இந்நாடுகளுக்கு வெளியேறும் தமிழ் மக்களது தொகைகுறைவதாகக் காணப்படவில்லை. உண்மையில் இவ்வாறு மேற்கு ஜேர்மனியில் தஞ்சம் புகுந்திருந்த அகதிகளில் 152 பேரே, சரக்குக் கப்பல் ஒன்றில் கனடாவுக்குச் செல்ல முயன்றனர் எனப் பின்னர் தகவல் வெளியாகியது. இந்தியாவிலிருந்து புறப்பட்டு வந்ததாகக் கூறிய செய்தி, தவறென அவர்கள் பின்னர் ஒப்புக்கொண்டனர்.

மேற்கு ஜேர்மனியில் வெசர் என்ற நதி முகத்துவாரத்தில் பெரெக் என்ற சிறிய துறைமுகம் உள்ளது. ஹொண்டுராஸில் பதிவு செய்யப்பட்டதும், ஜேர்மனியருக்குச் சொந்தமானதுமான 425 தொன் எடையுள்ள ஒறிக்கே என்ற கப்பலில் அவர்கள் யூலை 28 ஆம் திகதி அதிகாலை கனடாவை நோக்கிப் புறப்பட்டார்கள். இத்தகைய பிரயாணத்துக்கு தாங்கள் ஏற்பாடு செய்ததாக, ஹம்பேக்கில் கைது செய்யப்பட்ட இரு இலங்கையர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

ஒறிக்கே, சரக்குக்கப்பலில் 152 பேரும் 12 நாட்கள் பயணம் செய்தனர். மேற்கு ஜேர்மனியின் பல்வேறு நகரங்களிலிருந்தும் இலங்கைத் தமிழ் அகதிகள் இக்கப்பலில் பயணத்துக்கென வந்திருந்தனர். ஒவ்வொருவரும் தலா 3000 டாலர்களை இப்பயணத்துக்கெனக் கட்டணமாகச் செலுத்தினர். 45 வயதுடைய ஜேர்மனிய கப்பல் கப்டனும், ஒறிக்கேயின் சொந்தக் காரனுமான வொங்காங் பின்டெல் 70,00,000 மார்க்குகளை (3,40,000 டாலர்) இதற்காகப் பெற்றுக் கொண்டான். இக்கட்டணத்தில் ஒரு பகுதி காசாகக் கொடுக்கப்பட்டது. மிகுதி நகைகளாகவும் பெறுமதி மிக்க பொருட்களாகவும் கொடுக்கப்பட்டது.

யூலை 28 ஆம் திகதி பயணம் ஆரம்பமானது. இக்கப்பலில் சரக்குகள் வைக்கப்படும் பாரிய குதமொன்றில் இந்த 152 அகதிகளும் அடைக்கப்பட்டனர்: குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் பலர் இக் குழுவிலிருந்தனர். நாளொன்

திற்கு இரு தடவைகள் மட்டுமே இவர்கள் கப்பலின் மேல் தளத்திற்கு வரக் கப்பல் கப்டனால் அனுமதிக்கப்பட்டனர். மற்றும் வேளைகளில் எல்லாம் அக்குதத்தினுள் இருக்கவேண்டி நேர்ந்தது.

நான்கு பீப்பா தண்ணீர் மட்டுமே இந்த அகதிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. தகரத்தில் அடைக்கப்பட்ட 'சூப்' மட்டுமே உணவாக இருந்தது. இவற்றுடன் மூன்று வாளிகளை மட்டுமே உள்ளடக்கிய மலகூடமே இவர்களுக்கு இருந்தது. இவர்கள் போதுமான உணவு இல்லாமல் அவதிப்பட்டனர். ஒரு கட்டத்தில் இக்கப்பல் பயணத்தின் கொடுமையைத் தாங்கமுடியாத ஒரு இளம்தம்பதி, தமது 11மாதக் குழந்தையுடன் தற்கொலை செய்துகொள்ள முயன்றூர்.

12ஆம் நாள் கனடா நகரான மொன்றியல் வெகு அருகில் உள்ளது எனக் கூறிய நாள் வேறு கப்பல் ஒன்று காப்பாற்றி, நியூபவுண்லாந்துக் கரையில் சேர்த்தது. அங்கிருந்து அவர்கள் மொன்றியலிலும்,ரொறன்டோவிலும் உள்ள அகதி முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர்; ஒருவருடகாலம் தங்குவதற்கு உடனடியாக அனுமதியும் வழங்கப்பட்டது.

இலங்கைத் தமிழ் அகதிகள் குழு ஒன்று, மேற்கு ஜேர்மனியிலிருந்து கனடா நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக கனேடிய அரசாங்கத்திற்கு முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த அநாமதேயத் தகவலை ஜேர்மனியால் ஊர்ஜிதம் செய்ய முடியாதிருந்ததால் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. உயிர்காப்புப் படகுகளைச் சந்தித்து அகதிகளைக் கரை சேர்ப்பதற்கு உதவுமாறு கனேடிய மீன்பிடிகாரரர் கூலிக்கு அமர்த்தப்பட்டிருந்தனராம். கப்பல் கப்டனை பின்டெலைக் கைது

● எந்தப் பெண்ணை நீ மனப்பூர்வமாகக் காதலிக்கிறாயோ, அவள் எப்போதும் உன் கண்களுக்குக் குமரியாகவே தோன்றுவாள்.

—இங்கர்சால்

கப்டன், அகதிகளை இரு படகுகளில் ஏற்றி, கடலில் இறக்கிவிட்டான். கொந்தளிக்கும் அத்திலாந்திக் கடலில் அவர்கள் சிறிதும் மனிதாபிமான மற்ற முறையில், இறக்கிவிடப்பட்டனர். இருயந்திரங்கள் பூட்டப்பட்ட அந்த உயிர்காப்புப் படகுகளை இயக்கும் விதத்தையும் தெரிவித்து ஒரு திசையறிகருவியையும் அப்பயணிகளிடம் வழங்கி தமது கப்பலில் இருந்து அந்தப்பரிதாபகரமான அகதிகளை அகற்றி விட்டான் கப்பல் கப்டன். தொடர்ந்து அந்த இரு படகுகளிலும் கடலில் தத்தளித்த அவர்களை, மூன்றும் செய்வதற்காகச் சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

''இந்தப் பயணத்தின் அவலத்தை நாம் ஏற்கனவே அறிந்திருப்போமாயின் இதில் நாம் ஈடுபட்டிருக்கவே மாட்டோம்' என அவலப்பட்ட அந்த அகதிகள் இன்று கூறுகின்றனர்.

''அவதிப்பட்ட அடைக்கலம் புகுந்த இவர்களைக் கனடா கைவிடமாட்டாது' என கனேடிய குடிவரவுத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ச. தில்லேஸ்

# பாதையைக் காட்டுவான்

★

திருவிழா நல்லை முருகன் கோயிலில்
தெருவெலாம் மணக்கோலத்தின் சாயலில்
சரங்கள் சன்னங்கள் வேட்டுக்கள் மத்தியில்
வரங்கள் கேட்டிட வாருங்கள் போகலாம்

எந்த நேரமும் 'செல்' வந்து சாகலாம்
கந்தோர் சென்றவர் மீளாமற் போகலாம்
சொந்த மண்ணிலா இந்தத் துயர்க்கதை,
கந்தனைக் கேட்டுப் பதிலொன்று வாங்குவோம்.

நாயினும் கீழென நம்மை இழிவு செய்
ஆயுதப் பேய்களின் தீய செயல்களைப்
போயினி யாருக்குக் கூறுவோம், நல்லைப்பொற்
கோயிலை யாயினும் கும்பிட்டு ஆறுவோம்.

சோதனை இன்றிச் சுகமாய் இருந்தவர்
சாதனை செய்ததாய் இல்லைச் சரித்திரம்
ஏதுவரினும் முருகன் இருக்கிறான்
பாதுகாத்தொரு பாதையைக் காட்டுவான்.

ச. பத்மநாதன்

## ஒரு திருத்தம்

'சென்ற இதழில் தமிழர் போராட்டத்தில் முதல் கைக்குண்டுகள் என்ற கட்டுரையில், கொண்டலடிப்பிள்ளையார் கோயில் என்று குறித்திருப்பது தவறு. உண்மையில் அது கொண்டலடி வயிரவர் கோயில் என்றிருக்க வேண்டும்.'

— ஆசிரியர்

**தமிழரின் அவலமும்**
**அறை கூவலும்**
கட்டுரைத் தொடர்

அடுத்த இதழில் ஆரம்பமாகிறது.

# முறிகண்டி மின்கோபுரம் சரிந்தது....

'பொன்னுத்துரை சத்தியசீலன் அறிவுறுத்துரைகள் வழங்கும் ஓர் ஆளாக இருந்தார். ஒரு காலத்தில் மாணவர் பேரவையின் தலைவராக இருந்த அவர், தொழிலற்ற ஒரு விஞ்ஞானமானிப்பட்டதாரியுமாவார். (1978 ஆம் ஆண்டில் முருங்கனில் வைத்து இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையுடன் கொல்லப்பட்ட) பொலீஸ் சாஜன்ட் பேரம்பலத்தினால் 1973, பெப்ரவரி 23 ஆம் திகதியன்று கைது செய்யப்பட்டார். அது முதற்கொண்டுப் பின்னர் அவர் கனடாவுக்குத் தப்பிச் சென்றுள்ளார். எனினும் சாட்சியத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட அவருடைய வாக்கு மூலத்திலிருந்து, அரசியல் உள் நோக்குக் கொண்ட குற்றச்செயல்கள் சம்பந்தமான அவரது நடவடிக்கைகள் வெளியாயின; அவர் விசாரிக்கப்பட்டார். அவருடன் தொடர்பு கொண்டிருந்த முப்பது ஏனைய சந்தேக நபர்களைப் பற்றி அவர் தகவல் வெளியிட்டதுடன் அவர்கள் கைதாக்கவும் பட்டனர். மேலும், 1972 இல் இடம் பெற்ற அநேக சதியாலோசனைகளையிட்டும் அவர் தகவல் வெளியிட்டார்' என சன்சோனிக் கமிஷனர் முன், எஸ். பி. ஆரிய சிங்ஹ கூறினார்.

1972, மே மாதம் 20 ஆம் திகதி.

சத்தியசீலன் நீராவியடியிலுள்ள சுப்பிரமணியம் வீட்டிற்குச் சென்றிருந்தார், அங்கே காசி ஆனந்தன். ஆனந்த விநாயகம், சேனாதிராஜா, அமரசிங்கம், ஜெயம், மணியம் ஆகியோரைச் சந்தித்தார். ஆனந்த விநாயகம், 22 ஆம் திகதி துக்க தினமாக அனுட்டிக்கப்பெறல் வேண்டும் என அங்கு வைத்துக் கூறினார். ஆகவே, குடியரசு தினமான அன்று யாழ்ப்பாணக் குடாநாட்டினை இருளில் மூழ்க வைத்தல் வேண்டும் எனவும் அவர் மேலும் சொன்னார். சமுகமாக இருந்த அனைவரும் ஏகமனதாக உடன்பட்டனர்.

'முறிகண்டி'யிலுள்ள உயர் அழுத்த மின் கோபுரம் ஒன்றினைச் சரித்தால், யாழ்ப்பாணக் குடாநாடு இருளில் மூழ்கும், என முடிவு செய்தனர். மின் சாரசபையின் ஒரு முன்னை நாள் ஊழியராகிய ஜெயம் அதனைக் கவனித்துக் கொள்வார் என சுப்பிரமணியம் இயம்பினார். முறிகண்டி மின் கோபுரங்களை வீழ்த்துவதற்கு எந்தெந்தப் புரியாணிகள். கோபுர உறுப்புக்கள் என்பனவற்றை அகற்றல் வேண்டும் என்பதைத் தாம் அறிவார் எனவும், அதற்கு அவசியமான கருவிகள் தம்மிடம் இருந்தன என்றும் உரைத்தார்.

21 ஆம் திகதி சத்தியசீலன் மணியம்வீட்டிற்குச் சென்றார். அங்கு மணியமும் ஆனந்த விநாயமும் நின்றனர். ஜெயம் 'ஸ்பனர்' கள் கொணர்ந்தார். மாங்குளத்திலுள்ள மின் கோபுரம் பகுதிபகுதியாகக் கழற்றப்பட்டால், அது எளிதான ஒரளவாகும் என ஜெயம் கூறினார். தமக்கு அதனை எப்படிச் செய்வதெனத் தெரியும் என்றும் சொன்னார்.

மின் கடத்திக் கோபுரம் இருக்குமிடத்திற்குச் சென்று சத்தியசீலனும் ஆனந்த விநாயகமும் ஜெயமுமாக அதனைப் பாகம்பாகமாகக் கழற்றுவதெனத் தீர்மானித்தனர். சத்தியசீலன் காரொன்றைஅதன் பொருட்டு அமர்த்தும் வண்ணம் கேட்டுக் கொண்டார். வெளியே சென்ற மணியம், இராசலிங்கம் செலுத்தி வந்த காரொன்றினைக் கொண்டு வந்தார். பி. ப. 2 மணியளவில் புறப்பட்ட இந்த ஐவரும், வழியில் அமரசிங்கத்தை ஏற்றிக் கொண்டு போயினர். மாங்குளம் சந்தியிலிருந்து இரண்டு மைல்கள் தொலைவிலுள்ள ஓரிடம் வரை காரைச் செலுத்திச் சென்ற அவர்கள், மோட்டார் காருடன் இராசலிங்கத்தை விட்டு விட்டு, மின் கோபுரங்களுக்குக் கால்நடையாகப் போயினர்.

ஜெயமும் மணியமும் மூன்று மின் கோபுரங்களின் புரியாணிகளையும் சம்பந்தப்பட்ட பாகங்களையும் கழற்றினராயினும் அவற்றுள் ஒன்றினின்றும் சில ஆணிகள், பாகங்களைக் கழற்ற முடியவில்லை; சிலவற்றையே கழற்ற முடிந்தது. அதனால் கோபுரம் பொறிந்து விழவில்லை. அவர்கள் மீண்டும் காரை அடைந்தனர். அவர்கள் செய்தது என்ன என்பதனைச் சத்தியசீலன், இராசலிங்கத்திடம் சொல்ல, இராசலிங்கம், சுப்பிரமணியத்திடம் குறை கண்டதுடன் முன் கூட்டியே அறிந்திருந்தால் அத்தகைய ஓரலுவலில் இறங்கியிருக்கமாட்டார் எனக் கூறினார்.

யூலை, 22, 1972.

மின்கோபுரம் சரியவில்லை; குடியரசு தினத்தன்று யாழ்ப்பாணக் குடாநாடு இருளில் மூழ்கவில்லை.

1972, யூன் மாதம் 11 ஆம் திகதி மின் கோபுரங்கள் சாய்ந்து விழுந்தன. அன்று யாழ்ப்பாணம் இருளில் சூழ்ந்தது. -இவ்வாறு சன்சோனிக் கமிஷன்முன் கூறப்பட்டுள்ளது.

— சிவா

## வாசகர் கடிதம்

★ **மாலையும் முரசும்.**

மாலைமுரசு கண்டோம். [மாலைமுரசு என்ற பெயருக்கு ஆசிரியர் அளித்த விளக்கத்தைப் பரிசீலித்தோம். எவ்வகையிலேனும் மாலையும் முரசும் பொருந்துவனவாகத் தெரியவில்லை. மாலை என்பதற்குப் பொருள் மலர்மாலை எனக் கொள்க என ஆசிரியர் தெரிவித்துள்ளார். சரி அப்படியே ஒப்புக் கொண்டாலும் முரசு என்பதற்கு என்ன விளக்கம்? முரசு என்பது ஒலி. அந்த ஒலி மலர் மூலம் எப்படிப் பிறக்க முடியும்?

கொட்டடி, யாழ், — யாழூர்துரை

('மாலை முரசு' - நீங்கள் கூறுவது போல மாலையும் முரசும் தான். யுத்த காலத்தில் மலர்மாலை அணிந்து, முரசு ஒலிக்க தமிழ் மறவர் களம் புகுந்த கதையைக் கேள்விப்படவில்லையா?

— ஆசிரியர்)

★ **வளரட்டும்**

'மாலை முரசு' வளரட்டும் - பலர்<br>
மதிப்பை பெற்று உயரட்டும்<br>
'ஈழமுரசு' இதன் தொடக்கம்<br>
இன்னும் கிளைகள் சேரட்டும்.

மந்திகை, பருத்தித்துறை. சி. கிருஷ்ணமூர்த்தி

★ **வெள்ளி முரசு**

வெள்ளி முரசாக ஒலிக்கத் தொடங்கி இருக்கும் மாலை முரசு சுவையான குடும்ப இதழ் தான். வாழ்த்துகிறோம்!

கந்தரோடை. இ. கதிர்காமநாதன்.

# தேர் ஓடும் வீதியிலே...

வல்லிபுரம் குமரேசன்

நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில் தேரை, இம்முறை பெண்களும் வடம்பற்றி இழுத்தார்கள். அதற்குக்கூறப்படும் காரணம்; தேர்த்திருவிழாவின்போது போதிய பக்தர்கள் வருகை தராமையும், தேரை வடம்பிடித்து இழுப்பதற்கு இளைஞர்கள் இல்லாமையும். பெண்கள் வடம்பிடித்துத் தேரை இழுப்பது, இலங்கையைப்பொறுத்தவரையில், இம்முறைதான் முதன் முதல் நிகழ்ந்துள்ளது. இந்தியாவின் ஆலயங்களில் தேரைப் பெண்களும் இழுப்பது சாதாரணம்.


இம்முறை நயினாதீவில் இப்புதுமை நிகழ்ந்துவிட்டது.

யாழ்ப்பாணத்தின் பலபகுதிகளிலும் திருவிழாக்கள் நடந்தேறி வருகின்றன. அண்மைக் காலத்தில் சித்திரத்தேர்கள் பல, உருவாக்கப்பட்டு, சுவாமி வலம் வந்துள்ளார். கஷ்டங்களும், சுமைகளும் அதிகரித்து வரும் இந்தக் காலத்தில், கோயில்களில் கோபுரங்களும் தேர்களும் அமைந்து வருவது தெய்வச்செயல் எனலாம்.

அனலைதீவு ஐயனார் தேர் மிகவும் பெரிய சித்திரத்தேராகும்; சந்நிதி முருகன் தேர், இவ்வாண்டு இராணுவத்தினரால் தீக்கிரையாகிவிட்டது. நல்லூர்ச்சட்டநாதர் கோயிலிலும், திருநெல்வேலி சிவன் கோயிலிலும் புதிய சித்திரத்தேர்கள் இம்முறை வெள்ளோட்டம் விடப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலியிலும் குரும்பசிட்டியிலும் சித்திரத் தேர் செய்யும் சிற்பக் கலைஞர்கள்குடும்பங்கள் இன்றுள்ளன.

செப்டெம்பர் 2ஆம் திகதி நல்லூர்க்கந்தசுவாமி தேர்த் திருவிழா நிகழவுள்ளது. இருபத்து நான்காம் நாள் நடைபெறும் இத்திருவிழாவில், ஆறுமுகப்பெருமான் அழகிய தேரில் ஏறி வலம் வந்து பக்தர்களுக்கு காட்சி கொடுப்பார். யாழ்ப்பாணத்து மக்கள் அன்று இங்கு குழுமி நிற்பார்கள்.

தேர்களில் தெய்வங்களின் உருவச் சிலைகளை வைத்து ஊர்வலம் வருவது மிகப் பழைய காலம் முதல் இருந்து வந்திருக்கிறது. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவுக்கு வந்த பாகியான் என்ற சீன யாத்திரீகன், தான் கண்ட தேர்த்திருவிழா பற்றி எழுதி வைத்துள்ளான். மானசாரம் என்ற சிறப நூலில் தேரிலக்கணம் கூறப்பட்டுள்ளது.



சக்கரங்களின் பருமன், எண்ணிக்கை இவைகளைப் பொறுத்து தேரின் அளவை முழுத் தேர், முக்கால் தேர், அரைத் தேர் என்று தேர் செய்பவர்கள் வகுத்துள்ளனர். தட்டுக்களாலானதனமான பாகத்தின் மேல் கால்களை நிறுத்தி, அதன் மேல் கோயிலின் விமானத்தைப் போன்று உருவமுள்ள ஒரு கோப்புக் கட்டுவார்கள். இதன் உச்சியில் கலசம் இருக்கும். கடவுளின் கோயிலைப் போன்று அமைக்கப்பட்ட தேரின் அடிப்பாகத்தில் பூலோக, ஆகாய, சுவர்க்க வாழ்க்கை என்பனவற்றைச் சித்திரிக்கும் அழகிய பல உருவங்களைக் காணலாம். அரசன், நடனமாது, காமத்துப்பாலைச் சித்திரிக்கும் சிற்பங்கள், கின்னரர்கள், தெய்வச் சிற்பங்கள் என்பன தேரின் பீடத்தில் பொறிக்கப்பட்டிருக்கும். தேரில் ஆலவட்டங்கள், தோரணங்கள் என்பவற்றால் தேர் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

அரசர்கள் தேர்களில் பவனி வந்தனர்; யுத்தங்களின் போது தேரிலேறி போர்க்களஞ் சென்று போரிட்டனர். தேரின் மேலிருந்து போர் செய்வது மிகக்கடினம். இதில் வல்லுநர்கள் அதிரதர், மகாரதர் எனப் பட்டம் பெற்றனர். இராமரின் தந்தை எட்டுத்திக்குகள், பூமி, ஆகாயம் எனப் பத்துத் திசைகளிலும் தேர் செலுத்தக் கூடியவர்; அதனால் தசரதர் (தச=பத்து, ரதர்=தேரோட்டி) எனப்பட்டார்.

எதிர்வரும் செவ்வாய்க் கிழமை, நல்லூர் முருகப் பெருமான் தேரில் ஏறி வரப் போகிறார். ஆலயத்தின் ஆறு ஆலய மணிகளும் ஒலிக்கும். ஆறுமுகவேலன், வள்ளி-தெய்வயானை சமேதராய் வெள்ளிச் சிங்காசனத்தில் அமர்ந்து வீதிவலம் தேரில் வருவார். அவ்வேளை, தேரின் நீண்ட வடத்தைப் பெண்களும் பற்றி இழுப்பார்களோ?

## உடலுறுப்புக்களைப் பெயர்த்துப் பொருத்துதல்

1954, டிசம்பர், 23 ஆம் திகதி பொஸ்டன் நகரிலுள்ள ஒரு வைத்தியசாலையில் முதன்முறையாக உடலுறுப்பு ஒன்று பெயர்த்துப் பொருத்தப்பட்டது. ரிச்சாட் ஹெரிக் என்பவர் சிறுநீரக நோய் ஒன்றினால் தாக்கப்பட்டு இறக்குந் தறுவாயில் இருந்தபோது, அவருக்கு இன்னொருவரின் சிறுநீரகம் பொருத்தப்பட்டதால், உயிர் தப்பினார். அதற்குப் பின்னர் இவ்வகைச் சத்திரசிகிச்சை சர்வசாதாரணமாகிவிட்டது. முதன்முறையாக மனித இதயத்தைப் பெயர்த்துப் பொருத்திப் பெருஞ்சாதனையை ஈட்டிய பெருமை, தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த கிறிஸ்டியன் பேர்நாட் என்ற மருத்துவரையே சாரும்.

— க.கு

● யுத்தம் எந்நாளுமே தேவையில்லை. யுத்தம் அநாவசியமானது. நல்லவர் பலரது உயிரைக் 'காவு' கொள்ளும் யுத்தம், அநாகரீகத்தின் அதிசய உருவேயாகும்.

—ஐன்ஸ்டைன்.

# டியூட்டரிக் கல்வி மாணவர்களுக்கு அவசியமா?

இன்றைய மாணவ சமூகம் புத்தகங்களோடு, கல்லூரி வகுப்பறைகளுக்கும், தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் நாள் முழுதும் அலைவதைக் காணலாம். ஓய்வு ஒழிச்சலற்ற கற்கை நெறி அவசியமா? டியூட்டரிக் கல்வி மாணவர்களுக்கு அவசியமா, என நான்கு பேரைக் கேட்டோம். அவர்கள் கூறுகிறார்கள்.

**திரு. சி. நாகராஜா கருத்து:**



திரு. சி. நாகராஜா, சட்டத்தரணி, முன்னாள் யாழ். மாநகர சபை முதல்வர், யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைப் பிரதித்தலைவர் கூறுகிறார்;

'நான் மாணவனாக இருந்த காலத்தில் தனியார் கல்வி நிறுவனங்கள் இல்லை, உண்மையில் அது விரும்பத்தக்கது. கல்லூரி வகுப்பறைக்குள் ஆசிரியரின் வழிநடத்தலில் நாங்கள் உருவாகினோம். கற்பிப்பதை மாபெரும் கடமையாகவும் சேவையாகவும், தொண்டாகவும் கருதி அவர்கள் கற்பித்தார்கள். இன்று உயர்கல்வித் தகைமைக்குப் போட்டி நிலவுகிறது. பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் புகுத்தப்பட்டதால், ஆகக் கூடுதலான புள்ளிகள் எடுக்க நேர்ந்துள்ள நிர்ப்பந்தம், மாணவர்களைத் தனியார் கல்வி நிறுவனங்களை நாடி ஓடச் செய்துள்ளது. அவ்வாறு ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதால், திறமை வாய்ந்த ஆசிரியர்களின் போதனையைப் பெறுவதற்காக தனியார் கல்வி நிறுவனங்களை நாடிச் செல்ல வைத்துள்ளது. வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் காரணமாக, சிறந்த ஆசிரியர்கள் பலர் வெளிநாடுகளை நாடிச் சென்று விட்டனர். அதனால் பாடசாலைகளில் ஆசிரியப் பற்றாக்குறை நிலவுகிறது. அத்துடன் கல்லூரிகளின் உயர் வகுப்புகளில் அதிகமாணவர்கள்கற்கிறார்கள். அவர்களை சரிவர வழிநடத்துவதற்கு வாய்ப்பில்லை ஆசிரியர்களைப்பயிற்றுவிப்பதற்கு முன்பே, புதிய பாடத்திட்டங்கள் அறிமுகப் படுத்தப்பட்டு விடுகின்றன. குறித்த ஒரு பாடத்தில் பாண்டித்தியம் பெற்ற ஆசிரியர், எல்லாக் கல்லூரிகளிலும் போதிக்கமுடியாது. அன்று கற்றதைக் கற்பிப்பது கல்வியாக இருந்தது; இன்று கற்றுக் கற்பிப்பது கல்வியாகி விட்டது. எனவே, தனியார் கல்வி நிறுவனங்களை நோக்கி மாணவர்கள் செல்லவேண்டி நேர்ந்துள்ளது. இன்றைய நிலையில் தனியார் கல்வி நிறுவனங்கள் 'நெசசறி ஈவில்' தான்; நல்ல 'மூதேசி' தான். என்ன செய்வது? தவிர்க்கமுடியாததாயும், அவசியமானதாயும் மாறிவிட்டது. மாணவர்கள் தனியார், கல்வி நிறுவனங்களுக்குக் கல்விக்காகச் செல்வதால், ஓய்வு விளையாட்டு, பல்துறை நுண்கலை என்பவற்றைத் தியாகம் செய்ய நேரிடுகிறது. உடல்—உளப் பாதிப்புகள் உருவாகத் தான் செய்கின்றன. பல்கலைக்கழக அனுமதியில் கெடுபிடி இல்லாமல் போகுமாயின், தனியார் கல்வி நிறுவனங்கள் இழுத்து மூடப்பட்டுவிடும்.'

**திருமதி இரத்தினதேவி கூறுகிறார்:**



ஆனைக்கோட்டை ஆறுகால் மடத்தைச் சேர்ந்த திருமதி இரத்தினதேவி விவேகானந்தன் அவர்களை இதுபற்றிக் கேட்டோம். நான்கு பிள்ளைகளின் தாயான அவர் கூறுகிறார்:

"பாடசாலைகளில் ஆசிரியர்கள் பாடம் சொல்லித் தந்த போதிலும், மேலதிகமான பல விபரங்களைக் கேட்டறிய ரியூட்டறிக் கல்வி உதவுகிறது. கல்லூரிகளில் ஆசிரியர்கள் மனம் வைத்துப் படிப்பிப்பதில்லை. ரியூட்டறிகளில் பல பாடசாலைகளிலிருந்தும் மாணவர்கள் கலந்து கொள்வதால் அவர்களின் சந்தேகங்கள் தீர்க்கப்படும். பல தகவல்களையும் அறியமுடிகிறது. அதனால், ரியூட்டறிக் கல்வியால் அதிகநன்மை ஏற்படுகிறது என்பதே எனது அபிப்பிராயம். ரியூட்டறியில் படிக்கிறாய் கானே என்று பாடசாலை ஆசிரியர்களும் கற்பிப்பது குறைவு. எனது நான்கு பிள்ளைகளும் ரீயூட்டறிக்கும் படிக்கப்போகிறார்கள். அதனால், குடும்பத்தில் மேலதிகச் செலவு ஏற்படுகிறது; பணக்கஷ்டம் ஏற்படத் தான் செய்கிறது. ஆனால், குழந்தைகளைக் கற்பித்து உருவாக்க வேண்டும் என்பதற்காக அவற்றைச் சமாளிக்க நேரிடுகிறது."

**மு. ஜெயந்தன் கருத்து:**



யாழ்ப்பாண நகரின் பிரபலடியூட்டரி ஒன்றின் நிர்வாகியாகிய திரு. மு. ஜெயந்தன்அவர்கள் கூறுகிறார்;

"தமிழினத்திற்கு கல்வி ஓர் வரப்பிரசாதம். எனவேதான் 'பிச்சை புகினும் கற்கைநன்றே' என்ற பொன்மொழிக்கு அமைய ஒவ்வொரு பெற்றோரும் பலத்த கஷ்டங்களுக்கும் வறுமைக்கும் இடையில் தங்கள் பிள்ளைகளுக்குக் கல்வியூட்டுகிறார்கள்.

கூடிய வசதிகளைக் கொண்ட பாடசாலைகள் நகரப்பகுதியிலேயே அமைந்தன. எனவே, மாணவர்கள் நகரப்பகுதிகளுக்கும் படையெடுக்கத் தொடங்கினர். இதனால் எல்லா மாணவர்களுக்கும் பாடசாலைகளில் இடங்கொடுப்பது ஓர் கஷ்டமான விஷயமே. இதைவிட பின்தங்கிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் பலவற்றில் உயர் வகுப்புக்கள் இருப்பதும் இல்லை. இதுவும் மாணவர்கள் நகரப்பகுதியை நோக்கிப்படையெடுப்பதற்கு இன்னொரு காரணமாகும். இதைவிட பாடசாலையில் இரண்டு வருடம் கல்வி கற்ற உயர்வகுப்பு மாணவர்கள் பரீட்சையில் தோல்வியடைந்தால் பாடசாலையை விட்டு வெளியேறும் துர்ப்பாக்கிய நிலைக்காளாகின்றனர். பாடசாலையைவிட்டு வெளியேறிய மாணவர்கள் தாம் படித்த கல்வியைப் பயன்படுத்தி இன்னொரு துறையில் தங்களை ஈடுபடுத்தக்கூடிய கல்வித் திட்டம் எம்மிடம் இல்லாததும் ஒரு குறைபாடு.

எனவே, பாடசாலையை விட்டு வெளியேறி ஆழ்கடலில் திசையறியா கப்பல்போல அலையநேரிடும். மாணவர்களுக்கு தனியார் கல்வி நிறுவனம் ஒரு கலங்கரை விளக்கமாக திகழ்கின்றது. இதைவிட நாள்தோறும் பாடசாலை முடிந்தவுடன் மாணவர்களுக்கு பொழுது போக்குவதற்கான பிரயோசனமான பொழுது போக்கும் அம்சங்கள் எமது பிரதேசத்தில் இல்லை. எனவே மாணவர்கள் வீணிலே பொழுதைப் போக்காமல் தமது பாடங்களில் குறைவாக இருக்கும் அறிவை வளர்ப்பதற்கு தனியார் நிறுவனம் உதவுகின்றது. இதைவிட தனியார் கல்வி நிறுவனங்களின் விசேஷ அம்சம் என்னவென்றால்,ஒவ்வொரு தனியார் நிறுவனமும், கற்பிக்கும் ஒவ்வொரு பாடத்திற்கும் மிகச் சிறந்த அனுபவமிக்க ஆசிரியர்களை சேவைக்கு அமர்த்துகின்றனர். இதனால் மாணவர்கள் ஒரே இடத்தில் சிறந்த ஆசிரியர்களின் சேவையைப்பெற முடிகிறது. இன்னும் பல தனியார் நிறுவனங்கள் இருப்பதனால், ஒரு நிறுவனத்தில் இல்லாத ஓர் சிறந்த ஆசிரியரின் சேவையை இன்னோர் நிறுவனத்தில் மாணவர்கள் பெற முடிகிறது. இதைவிட பாடசாலையைவிட்டு ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் சேவையை மீண்டும் பெறக்கூடிய சந்தர்ப்பம் மாணவர்களுக்கு கிடைக்கின்றது. இதேபோல, சர்வகலாசாலையில் இடம்பெற முடியாத மாணவர்களுக்கு, தனிப்பட்ட முறையிலே படித்

**நான்கு பேர் கருத்து**

துப் பட்டம் பெறக்கூடிய வாய்ப்பை அரசாங்கம் செய்துள்ளது. இப்படியான மாணவர்கள் பலரை பட்டதாரிகளாக்கிய தனியார் நிறுவனங்கள் பல உண்டு. மேலும் பாடசாலைகளிலே இல்லாத Courseஐ தனியார்நிறுவனங்களில்இன்று கற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

தனியார் நிறுவனங்களில் படித்து பல்கலைக்கழகம் சென்றவர்களும், பட்டதாரிகள் ஆனவர்களும் பலர். எனவே, தனியார் கல்வி நிறுவனத்தால் கல்வி பாழாக்கப்படுவதாக கூறப்படும் ஒருசிலரின் கூற்றில் உண்மையில்லை. மேலும் தனியார் கல்விநிறுவனத்தில் கல்வி கற்பது மாணவர்களுக்கு ஒரு Fashion என்று சிலர் கூறுகிறார்கள். தனியார்நிறுவனத்தில் மாணவர்களைப் பெற்றோரே கொண்டு வந்து சேர்க்கின்றார்கள். இதைவிட சிலபாடசாலைகளைவிட கட்டுப்பாடாக நடத்தப்படும் தனியார் நிறுவனங்களும் உண்டு என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. எனவே, மாணவர்களினதும் பெற்றோர்களினதும் முழு ஆதரவையும் பெற்றே தனியார் நிறுவனங்கள் சேவையாற்றி வருகின்றன.''

## செல்வி ப. இராமநாதன் கருத்து:



யாழ். இந்து மகளிர் கல்லூரி முன்னாள் அதிபர் செல்வி பத்மாவதி இராமநாதன் கூறுகிறார்: ''இன்று பாலர் வகுப்புத் தொடக்கம் கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்புவரை தனியார்கல்வி நிறுவனங்களுக்குச் செல்கின்றனர். எழுபதுகளில் கொண்டு வரப்பட்ட தரப்படுத்தல் தனியார் கல்வி நிறுவனங்களின் வளர்ச்சி ஒரு பிரதான காரணியாகும். கூடிய புள்ளியைப் பெற்று மருத்துவப் பிரிவுக்கோ பொறியியல் பிரிவுக்கோ தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற அங்கலாய்ப்பு; பொருளாதார ரீதியில் அரசாங்க உத்தியோகமாயின் டொக்டர் அல்லது எஞ்சினியர் ஆகிவிட்டால் பிள்ளையின் எதிர்காலம் சிறப்பாக இருக்கும் என்ற பெற்றோரின் விருப்பு என்பன பிள்ளைகளைத் தனியார் கல்வி நிறுவனம் நாடி அனுப்பி வைத்துள்ளன.

''தனியார் கல்வி நிறுவனங்களினால் நன்மைகளுமுள்ளன; தீமைகளுமுள்ளன. 1976-க்குப் பின் பல பாடசாலைகளில் ஏ. எல். வகுப்புகள் போதிய ஆசிரியர்களின்றித் தொடங்கப்பட்டன. வகுப்புக்களில் கற்பித்தல் இல்லாத காரணத்தால் மாணவர்கள் ரியூஷன் சென்ரர்களை நாட வேண்டி ஏற்பட்டது. அந்த வகையில் இது மாணவர்கட்கு உதவியாக அமைந்தது பின் தங்கிய இடங்களிலிருந்து மாணவர்கள் ரியூஷன் சென்ரர்களை நாடி வந்தனர்; சிலர் நன்மையடைந்தனர். வகுப்பறைகளில் கற்றதிலும் பார்க்கக்கூடிய அளவில் கற்பதற்கு இவை வாய்ப்பளித்தன என்பது உண்மைதான். தனியார் கல்வி நிறுவனங்களால் ஏற்பட்டிருக்கும் தீமைகளையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

''பாடசாலைகளில் கற்பிக்கும் அலகுகள் வேறாகவும் தனியார் நிலையங்களிலோ வீடுகளிலோ கற்பிக்கும் அலகுகள் வேறாகவுமுள்ளன. சராசரி மாணவர் இரண்டையும் கிரகியாது விடுகின்றனர். பாடசாலையில் கற்றதைத் திருப்பிப் படிப்பதற்கு நேரமில்லை. சிந்தித்து வாசித்து அறிவைப் பெருக்கும் ஆற்றல் தடைப்படுகிறது. நோட்ஸ்களில் தங்கியிருக்கும் மனப்பான்மை வந்து விடுகிறது. பெற்றோர், ரியூஷன் கட்டாய தேவை என்ற நிலைப்பாட்டிற்கு ஆளாக்கப்பட்டு பணத்தை வீணாகச் செலவிடுகின்றனர்.

''பாடசாலையில் கூடிய புள்ளிகள் பெறும் மாணவர்கள்தாம் ரியூஷனால் பயனடைகிறார்களே தவிர, மற்றவர்களல்லர். ஆசிரியரின் கற்பித்தலிற்கும்ரியூஷன் வகுப்பில் கற்பித்தலுக்கும் வேறுபாடு காணும் போது மாணவர்கள் தடுமாறும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. இதனால் மாணவர்களுக்குரிய வழி களில் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன மாணவர்களுக்குப் பாடசாலைகளில் பாடவிதானத்துடன் இணைந்த விளையாட்டு, உடற் பயிற்சி, நடனம், சித்திரம், சங்கீதம், சாரணர்பயிற்சி, முதலுதவிப் பயிற்சி என் பனவற்றிற்கு ரியூஷன் ஒரு தடையாகவுள்ளது.

''பெற்றோர், பிள்ளைகள் ரியூற்றரிகளுக்குப் போகிறார்கள் தானே; படிக்கிறார்கள் என்று நினைக்கிறார்கள். அதனால் பிள்ளைகளின் மீது அவர்கள் காட்ட வேண்டிய அக்கறை குறைகிறது. ஆசிரியர்களும் பிள்ளைகளுள் ரியூஷனுக்குப் போகிறார்கள் தானே. நாங்கள் ஏன் பிரயாசைப்பட வேண்டும் என்ற மனப்பான்மையை உருவாக்கிக் கொண்டுள்ளார்கள்.

இது எங்குபோய் நிற்கப் போகின்றதோ?''

**நாதன்**

# சமையல் பகுதி

## ரவைப்புட்டு

**தேவை :—**

ரவை ½ கிலோ, சர்க்கரை 1/4 கிலோ, ஏலக்காய் 6, முந்திரிப் பருப்பு 25 கிராம், தேங்காய் 1, நெய் 10 கிராம், தேவையான அளவு உப்பு.

**செய்முறை :—**

முதலில், ரவையை சிறிது நெய்விட்டு, நன்றாகவறுக்கவும், பிறகு வறுத்த ரவையை ஆட்டுக் கல்லில் போட்டு நன்றாக இடித்து எடுத்துக் கொள்ளவும்.

தேங்காயை பொடிப் பூவாக துருவிக்கொள்ள வேண்டும்.

வாணலியை அடுப்பில் வைத்து சிறிது நெய் ஊற்றி, நெய் காய்ந்ததும் முந்திரிப் பருப்பை இரண்டாக உடைத்து காய்ந்த நெய்யில் போட்டு சிவக்க வறுத்து எடுக்கவும்.

பிறகு, இடித்த ரவையில் உப்புத் தண்ணீர் தெளித்து நன்றாக பிசைந்து, பிசைந்த மாவை குக்கரில் வைத்து நன்றாக வேகவைக்க வேண்டும். வெந்த மாவை எடுத்து ஒரு பாத்திரத்தில் வைக்கவும்.

ஒரு பாத்திரத்தில் சர்க்கரை முழுவதையும் போட்டு சிறிது தண்ணீர் ஊற்றி அதை அடுப்பில் வைக்கவும். சர்க்கரை நன்றாக பாகு பதத்தில் வந்ததும் இறக்கி வைத்து, அதில் அவித்ததை போட்டு நன்றாக கிளறிவிடவும். அவற்றுடன் துருவிய தேங்காய், வறுத்த முந்திரிப் பருப்பு, ஏலக்காயை பொடி செய்து போட்டு நன்றாக கிளறிவிடவும்.

## பயத்தம் பருப்பு அல்வா

**தேவை :—**

பயத்தம்பருப்பு1/4 கிலோ, சர்க்கரை 1/4கிலோ, முந்திரிப் பருப்பு தேவையான அளவு, ஏலக்காய் 2, நெய் 100 கிராம்.

**செய்முறை :—**

முதலில், பயத்தம்பருப்பை ½ மணி நேரம் தண்ணீரில் ஊறவிட்டு, ஆட்டுரலில் போட்டு, கெட்டியாக அரைத்துக்கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் சிறிது நெய்விட்டு, அடுப்பில் வைக்கவும். நெய் காய்ந்ததும் முந்திரிப் பருப்பை போட்டு வறுத்து எடுத்துக் கொள்ளவும், மீதி உள்ள நெய்யில் அரைத்த மாவை போட்டு, கிளறிவிடவும். அடுப்பை நிதானமாக எரியவிடவும்.

20 நிமிடத்துக்குப் பிறகு, சர்க்கரையைப் போட்டு கிளறிக்கொண்டு இருக்கவும். அல்வா பதத்தில் வந்ததும், ஏலக்காயை பொடி செய்து போடவும். வறுத்த முந்திரிப் பருப்பையும் போட்டு கிளறவும்.

**தொகுப்பு — கங்கா**

சமையல் பகுதிக்கு தரமான உணவு வகைகளை தயாரிக்கும் பக்குவமுறைகளை எழுதி அனுப்பினால் பிரசுரிக்கப்படும்.

சமையல் பகுதி - மாலைமுரசு
140, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## சிறுகதை




பஸ் புறப்பட இன்னும் அரை மணித்தியாலம் இருக்கின்றது வழியனுப்ப வந்தவர்களின் வதனங்களில் ஒருவகை கலக்கமும் ஏக்கமும் இழையோடுகின்றன. மோகன் பஸ்ஸில் ஏறி அமர்ந்து கொண்டான். அவனுக்குப் பக்கத்தில் இருந்த ஆசனத்தில் சுமாரான உயரம் உடைய பொது நிறமான ஒரு வாலிபன் அமர்ந்து கொண்டான்.

மேர்கன் கொழும்பில் உள்ள அரசாங்க அலுவலகம் ஒன்றில் ஒன்பது வருடங்களாக வேலை செய்து வருகிறான். வெளி நாடு போவது கூட இப்போது கஷ்டமான விசயமல்ல. கொழும்பு போவது தான் மிகவும் சிரமமான காரியமாகும். எத்தனை இடங்களில் இறங்கி ஏற வேண்டும், அவனுக்கு இப்போது பிரயாணம் என்பதே வெறுத்துப் போய் விட்டது.

மோகன் பக்கத்தில் இருந்த வாலிபனைப் பார்த்து புன்னகை செய்தவாறு, "தம்பி எங்க போறீங்க..." என்று மெல்ல பேச்சுக் கொடுத்தான். சற்று நேரம் மௌனம் நிலவியது.

"கொழும்புக்குப் போகிறன்"... என கனிவான குரலில் பதிலளித்தான் அந்த வாலிபன்.

"கொழும்பில வேலை செய்கிறீங்களா...?"

"இல்லை, நான் வெளிநாடு போறதுக்காக கொழும்புக்கு போறன்" ...என்று சோகமாக பதிலளித்தான்.

"...எந்த நாட்டுக்கு போகப் போறீங்கள்?"...

'சவூதி அரேபியா விற்கு'... என்று பதிலளித்தவாறு அந்த வாலிபன் யன்னலால் வெளியே எட்டிப் பார்த்தான்.

மோகனும் தனது பார்வையை யன்னலுக்கு வெளியே செலுத்தினான். வெளியே வாடிய முகத்துடனும் ஒல்லியான தோற்றத்துடனும் ஒரு வயதான அம்மா நின்று கொண்டிருந்தார். அவருக்கு அருகில் வயது வந்த பெண்களும் நின்று கொண்டிருந்தார்கள்.

அப் பெண்கள் மெலிந்திருந்தார்கள். அவர்கள் அணிந்திருந்த உடைகள் ஏழ்மையை வெளிக்காட்டின.

பஸ்ஸிற்கு வெளியே நிற்கும் வயது முதிர்ந்த அம்மாள் இந்த வாலிபனுடைய தாயார். அவருக்கு அருகில் நிற்கும் பெண்கள் இவ் வாலிபனின் சகோதரிகள் என மோகன் ஊகித்துத் தெரிந்து கொண்டான். அவர்கள் ஒவ்வொருவருடைய முகங்களிலும் சோகத்தின் சாயல் நிழலாடின.

பஸ்ஸிற்கு வெளியே நின்று கொண்டிருந்த அந்த அம்மாள் மோகனைப் பார்த்து... "நீங்களும் கொழும்புக்கா போறீங்கள்?"... என்று தயக்கத்துடன் கேட்டாள்.

'ஆம்' என புன்முறுவலுடன் மோகன் பதிலளித்தான்.

"தம்பி... இவன் என்னுடைய மகன். இவனுக்கு பெயர் சுந்தரேசன். சவூதிக்கு போறதுக்காக கொழும்புக்கு வாறார்". இவரை கொழும்பு போறவரைக்கும் கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்க" அவள் கண்கள் கலங்குகின்றன.

"கொழும்பு போறவரைக்கும் உயிர் எங்கட கையில இல்ல. எல்லாம் இறைவனுடைய கையில தான். போகும் வரை எத்தனையோ இடங்களில் இறங்கி ஏறவேணும். இடையில எந்த நேரத்தில என்ன நடக்கும் என்று எவருக்கும் தெரியாது. ஏதோ ஒரு நம்பிக்கையிலதான் பயணத்தை மேற் கொள்கிறோம்" என்று கூறியவாறு மோகன் அம்மாளை நோக்கினான்.

அந்த அம்மாளின் மனம் கலக்கத்துடன் இருப்பது அவனுக்கு தெளிவாகப் புரிந்தது.

அவள் மோகனை நிமிர்ந்து கலக்கத்துடன் பார்த்தவாறு... 'தம்பி எனக்கு ஐந்து பிள்ளையள். இவன்தான் எனக்கு இருக்கிற ஒரேயொரு ஆம்பிளைப்பிள்ளை, இவனுக்கு நாலு அக்கா மார் இருக்கினம்'...

மோகன் அம்மாளுக்கு அருகில் நிற்கும் நாலு பெண்களையும் உற்று நோக்கினான்.

''ஒரு பிள்ளைய கலியாணம் செய்து கொடுக்க லட்சக் கணக்கில சீதனம் கேட்கிறாங்கள், நான் சீதனத்துக்கு எங்க போவன். இந்தக் காலத்தில சீதனம் வாங்காம கலியாணம் செய்ய யார்வருவான்'.. என்று கலங்கிய கண்களுடன் அந்த மாது கூறினாள்.

எம் மத்தியில் இருக்கும் சீதனம் என்ற பேய் எப்போது எம் இனத்தை விட்டு அகலும் எப்போது பெண்களுக்கு விடிவு வரும். இந்த சீதனக் கொடுமையால் எத்தனையோ பெண்கள் அவலப் படுகின்றார்களே! என மனதுக்குள் வேதனைப்பட்டான்.

"தம்பி இவன் தான் எங்கட குடும்பத்துக்கு இவ்வளவு நாளும் உழைச்சுத்தந்தான் ' இஞ்ச இருந்து உழைச்சு அக்காமாருக்கு நல்ல வாழ்வு அமைத்துக் கொடுக்க இயலாது... நான் வெளிநாடு போகப்போறன் என்று ஒரே பிடியா நிண்டான். இருக்கிற ஒரே ஒரு காணியையும் ஈடு வைச்சு அனுப்புறன்...' என்று உண்மைகளை மறைக்காமல் அவள் கலக்கத்துடன்கூறினாள்.

சாரதி தனது ஆசனத்தில் வந்து அமர்ந்து கொண்டார்... ஒரு முறை இறைவனை நினைத்துக்கொண்டு பஸ்வண்டியை "ஸ்ராட்" செய்தார். பஸ் புறப்படமறுத்தது. மறு முறையும் முயன்றார் .பஸ்வண்டி ('ட்றூர்ம்') என்ற உறுமலுடன் அவ்விடத்தை விட்டு சற்று தூரம் சென்று அசையாமல் நின்றது.

அந்த அம்மாள் தனது மகன் சுந்தரேசனைப் பார்த்து ' 'தம்பி சுந்தரேசா;... கவனமாகப் போ ராசா . உன்னை நம்பித்தான் நாங்கள் எல்லாரும் இருக்கிறம். கொழும்புக்கு போன உடன கடுதாசி எழுதிப்போட்டு விடு ராசா' என்று கூறியவாறு அவனது கைகளை பற்றிக்கொண்டு கதறி அழுதாள்.

மோகனுக்கு அவர்களைப் பார்க்க பரிதாபமாக இருந்தது... தாய் மகனைப் பிரியும் நேரம் வந்துவிட்டது .. இனி அவனைக் காணமுடியுமா?... அவன் மீண்டும் ஊருக்கு வர எத்தனை வருடங்கள் செல்லுமோ தெரியாது.

சுந்தரேசனுடைய சகோதரிகள் தம்பீ வெளிநாடு சென்று உழைத்து தங்களுக்கு நல்

வாழ்வு அமைத்துத் தருவான் என்ற எதிர்பார்ப்புடன் அவனை நோக்குகின்றனர்.

ஒருவாருக பஸ் புறப்பட்டது.

மோகன் அந்த அம்மாளை ஒரு முறை திரும்பிப் பார்த்தான். "தம்பி என்ர மகனை கொழும்பு போகும் வரைக்கும் கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்க..." என்று அழுதவாறு கூறினுள். மோகன் தலையசைத்து சம்மதித்நான்.

பயணம் அனுப்புவதற்காக வந்தவர்களுடைய குரல்கள் ஒலிக்கின்றன... "போன உடன் கடிதம் போடு..." என்று அவர்கள் சொல்லும் இந்த வசனம் அவனது காதுகளில் தெளிவாக ஒலித்தது.

மோகன் விடுமுறைக்கு யாழ்ப்பாணம் வந்து மீண்டும் கொழும்புக்கு திரும்பும் போது ஒவ்வொரு முறையும் அவனது காதுகளில் கூர்மையாக ஒலிப்பது இந்த வசனங்கள்தான்.

இந்த வசனத்தை கேட்டுக் கேட்டு மோகனுக்கு சலித்துப் போய் விட்டது.

பஸ்சின் வேகம் அதிகரித்தது. கொழும்பிற்குச் செல்லும் வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்ருக வந்து கொண்டிருந்தன. இக் காட்சியைச் சிறுவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றுர்கள்.

சுந்தரேசன் மோகனைப் பார்த்து தயக்கத்துடன் "அண்ணே எத்தனை மணிக்கு பஸ் கொழும்புக்கு போய் சேரும்"...

"காலம ஆறு முப்பதுக்கு புறப்பட வேண்டிய பஸ் ஏழு மணிக்குத்தான் புறப்பட்டது... இரவு பன்னிரெண்டு மணிக்கு போய்ச் சேருதோ? இல்லாட்டி... விடியப்புறம் தான் போய்ச் சேருதோ தெரியாது. நேரத்தை சரியாச் சொல்ல ஏலாது"... என்ருன் மோகன்.

"எத்தனை இடத்தில சோதிப்பாங்கள்...?".. என்ருன் சுந்தரேசன் பதற்றத்துடன்.

"பத்து... பன்னிரெண்டு இடங்களில சோதனைகள் நடக்கும்"...

"சோதிக்கும் போது அடையாள அட்டைகளைப் பார்ப்பார்கள்... அதுக்குப் பிறகு எங்கட பெட்டியள அக்குவேறு ஆணிவேருக சோதிப்பார்கள். "...அவர்களுக்கு எங்களில் யார் மீதாவது சந்தேகம் வந்து விட்டால் பிடித்துக் கொண்டு போய் விடுவார்கள்..." சுந்தரேசனுடைய முகம் கறுத்தது.

"அண்ண, "எனக்கு பயமாக் கிடக்கிது..." என்று கூறியவாறு அவன் பார்வையை பஸ்சிற்கு வெளியே திருப்பினுன்.

பஸ்சின் வேகம் குறைந்தது. வீதி எங்கும் பள்ளங்கள். பள்ளங்கள் காணப்படாத இடங்களே இல்லை. சில ஆண்டுகளாக வீதிகள் திருத்தும் வேலைகள் நடைபெறவில்லை என்பதை உணர்த்தின.

பஸ் ஆடி ஆடி ஊர்ந்தது. புழுதிகிளம்பத் தொடங்கியது. பஸ்சிற்குள் இருந்து வெளியில் எதையும் பார்க்க முடியாத அளவுக்கு புழுதி புகை மண்டலமாக காட்சி தந்தது.

சில இடங்களில் பஸ் நிறுத்தப்பட்டு மிகவும்மெதுவாகவும் அவதானமாகவும் செல்ல வேண்டியிருந்தது. ஆங்காங்கே வீதிகளில் பெரிய கிடங்குகள் காணப்பட்டன. இக்கிடங்குகள் கண்ணி வெடிகள் வெடித்ததால் ஏற்பட்டவை.

ஆனையிறவு தடை முகாம் வந்து விட்டது. எல்லோரும் அடையாள அட்டைகளையும் பெட்டிகளையும் எடுத்துக் கொண்டு இறங்குமாறு பஸ் நடத்துனர் பிரயாணிகளைப் பார்த்து உரத்த குரலில் கூறுகின்ருர்.

சுந்தரேசன் மோகனைப் பார்த்தான். "தம்பி, பயப்படாம உங்கட பெட்டியையும் அடையாள அட்டையையும் எடுத்துக்கொண்டு இறங்கி வாங்கோ,"... என்ருன்.

எல்லோரும் பஸ்சை விட்டு இறங்கி மூட்டை முடிச்சுக்களை ஒரு கையிலும், மறு கையில் அடையாள அட்டையையும் எடுத்துக்கொண்டு வரிசையில் நிற்கின்ருர்கள். பொலிசார் ஒவ்வொருவருடைய பெட்டிகளையும் அடையாள அட்டைகளையும் சோதிக்கின்றனர்

மோகன் தான் இறங்கி நிற்கும் இடத்தை ஒரு முறை சுற்றிப் பார்க்கின்ருன். எங்கும் மணல் மூடைகள் சுற்றி முள்ளுக் கம்பிகளாலான வேலிகள். மூலைக்கு மூலை துப்பாக்கிகளை நீட்டிக்கொண்டு இராணுவ வீரர்கள் காவல் புரிகின்றனர்.

சில இராணுவ வீரர்கள் காவலுக்கு நின்றவாறு பஸ்ஸில் பிரயாணம் செய்யும் அழகான பெண்களைப் பார்த்து கையால் சைகை காட்டிச் சிரிக்கின்றனர்.

சுற்றிப் பார்த்த மோகனை ஒரு இராணுவ வீரன் முறைத்துப் பார்த்தான். மோகனுக்கு அவனுடைய பார்வைபயத்தை ஊட்டியது. "திடீரென. கையில் இருக்கும் துப்பாக்கியால் சுட்டு விட்டால் என்ன செய்வது".. ஏன் வீண் வம்பு... தலை குனிந்தவாறு மோகன் பஸ்ஸிற்குள் ஏறிக்கொண்டான். அவனைப் பின் தொடர்ந்து. சுந்தரேசனும் ஏறிக்கொண்டான்.

பஸ் புறப்பட்டது. பஸ்ஸிற்குள் உரையாடல்கள் ஆரம்பமாகின. வயது முதிர்ந்த ஒரு பெரியவர் தமது வேதனைகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டிருநதார். மோகன் தனது பார்வையை அப்பெரியவர் பக்கம் திருப்பி காதைக் கொடுத்து என்ன பேசுகிருர் என கூர்ந்து கேட்டான்.

"எங்கட பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வாறதாக் காணயில்ல தினமும் அப்பாவியள கொன்றபடிதான் இருக்கிருர்கள். ஒரு இடத்திற்கும் நிம்மதியாகப் போக முடியாமற் கிடக்கிது... பிள்ளையள பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பவே பயமாக் கிடக்கிது... இப்ப யாழ்ப்பாணப் பிள்ளையளின்ர படிப்பு பாழாப் போச்சுது..."

அடுத்த இதழில்

**காளை**

செம்பியன் செல்வன் எழுதும் **சிறுகதை** வெளி வருகிறது.

"வீட்டில நிம்மதியா இருக்க முடியுதா! அதுவும் இல்ல... ஆகாயத்தால குண்டு போடுருங்கள். "செல்" அடிக்கிருங்கள். இந்த கொடுமையள யாரட்ட போய்ச் சொல்லுறது! எவ்வளவு காலத்துக்கென்று இப்படிக் கஸ்ரப்படுறது?" என்று கூறிப் பெருமூச்சு விட்டார் அந்த வயோதிபர்.

பஸ் கிளிநொச்சியை வந்தடைந்தது பஸ்சிற்குள் ஓரே அமைதி. மோகன் நிமிர்ந்து பார்த்தான். கிளிநொச்சிச் சந்தை இருந்த இடம் அழிந்து கிடந்தது. இபபோது சந்தை இருந்த இடம் இராணுவ முகாமாகக் காட்சி தந்தது.

எல்லோரும் பஸ்ஸைவிட்டு பெட்டிகளுடன் இறங்குகின்ருர்கள். சோதனைகள் நடக்கின்றன. மீண்டும் பஸ்ஸிற்குள் ஏறுகின்ருர்கள். பஸ் மெதுவாக நகர்ந்து வேகம் அதிகரிக்கிறது. மீண்டும் பஸ்ஸிற்குள் உரையாடல்கள் தொடருகின்றன.

கொக்காவில், மாங்குளம், ஓமந்தை, வவுனியா, ஆகிய இடங்களில் உள்ள முகாம்களுக்கு அருகே சோதனைகள் முடிந்து பஸ் இப்போது ஈரப் பெரிய குளம் இராணுவ முகாமருகில் சோதனைக்காக நிறுத்தப்பட்டது.

சோதனைகள் ஆரம்பமாகின்றன. இங்கு மிகக் கடுமையான சோதனை நடக்கின்றது. ஆண்களின் உடலில் ஏதாவது காயங்கள் இருக்கின்றனவா! என ராணுவத்தினர் கூர்ந்து கவனிக்கின்ருர்கள்.

சுந்தரேசனை இராணுவ வீரன் ஒருவன் தன்னிடம் சோதனைக்கு வருமாறு அழைக்கிருன். சோதனை தொடங்குகிறது. சுந்தரேசன் திரு திருவென முழிக்கத்தொடங்கினுன்.

அவனுடைய காலில் இருந்த காயத்தை இராணுவ வீரன் கூர்ந்து பார்க்கிருன்... "இக் காயம் எப்படி வந்தது"... என சிங்களத்தில் சுந்தரேசனைப் பார்த்துக் கேட்டான். சுந்தரேசனுக்கு சிங்களம் தெரியாது. இராணுவ வீரன் சொல்வது புரியாமல் தடுமாறினுன்.

மோகன் இராணுவ வீரனுக்கு அருகில் சென்று.. "இவருக்குசிங்களம்தெரியாது; இவர் வெளிநாடு போவதற்காக கொழும்புக்கு போகிருர்" ...என்று விளக்கிக் கூறினுன்.

இராணுவ வீரன் மோகனைப் பார்த்து "இவருக்கு காயம் எப்படி வந்தது"...என்ருன். மோகன் சுந்தரேசனைப் பார்த்து "உமக்கு எப்படி இந்தக் காயம் வந்தது?".. என்று கேட்கிருர் என்ருன்.

"வாகனங்கள் திருத்தும் 'கராச்சில' மெக்கானிக்கா வேலை செய்யேக்க மோட்ட

(13ஆம் பக்கம் பார்க்க)

**பாதிக்கப்படும் ஈழத்தமிழர்களுக்கு நிதி வசூலிக்கு முகமாக ஐந்து நாடுகளில் மேடையேறும்**

# நட்சத்திர இரவு

பாதிக்கப்பட்டு குடி பெயர்ந்து இந்தியாவிற்கு வரும் ஈழ மக்களின் நல் வாழ்விற்கு நிதி வசூலிக்கு முகமாக 'ஈஸ்ட் லண்டன் பை (F) ன் ஆட்ஸ்' ஸ்தாபனத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட நட்சத்திர இரவு நிகழ்ச்சித் தொடரின் முதலாவது நிகழ்ச்சி அண்மையில் லண்டனில் மேடையேறியது. இந்திய, ஈழகலைஞர்களின் ஆதரவுடன் நடைபெற்ற இந்தநிகழ்ச்சியில் இந்திய திரைப்பட உலகில் முன்னணி நட்சத்திரங்களான நளினி, ஜெயஸ்ரீ, நகைச்சுவை நடிகர்களான ரொக்கட் ராமனுதன், வெண்ணிற ஆடை மூர்த்தி அவரின் மனைவி மணிமாலா, பிரபல பக்திப்பாடகி எம். ஆர். விஜயா மற்றும் ஹிந்தி பட உலகிற்கு அறிமுகமாகும் பிரபல நாட்டிய நடிகை செந்தூரி, ஈழத்து கலைஞர் ஏ. ஈ. மனோகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

லண்டன் நகரினுள் இருக்கும் பெரிய மண்டபங்களில் ஒன்றாக வெஸ்ட் மினிஸ்டர் சென்ரர் ஹோலில் அரைப்பங்கிற்கு மேலாக மக்கள் கூட்டம் நிறைந்திருந்தது. இம் மண்டபம் மொத்தமாக 2, 300 ஆசனங்களை கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. மிகவும் ரசிக்கத்தக்க முறையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் முக்கிய பங்கேற்று ரசிகர்களின் பெரும் வரவேற்பை பெற்றவர்கள் நாட்டிய நடிகை செந்தூரி, பாடகி எம். ஆர். விஜயாவும், ஏ. ஈ. மனோகரனுமாவார். தமிழ்த் திரைப்பட நடிகைகள் நளினி, ஜெயஸ்ரீயின் நடனத்தை எதிர்பார்த்து வந்த பலருக்கு அங்கு ஏமாற்றம் தான் காத்திருந்தது. இவ்விரு நடிகைகளின் நடன நிகழ்ச்சி மேடையேறும் என பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதிலும் இருவரும் மேடையில் 'மின்னி' மறைந்தார்கள்.

அதிலும் குறிப்பாக நடிகை நளினி மேடையில் இரண்டு நிமிடங்கள் மட்டுமே தோன்றினர். இவ்வாறு தோன்றி மறைவதன் மூலம் தம்மீதான அபிமானத்தை ரசிகர்களிடம் அதிகரிக்கலாம் எனவும் அவர்கள் நினைத்திருக்கலாம், அல்லது யாராவது முன்னணி கதாநாயகர்கள் பூஞ்சோலையில் விட்டுத் துரத்தினால்தான் அவர்களின் 'திறமை' வெளிப்படுமோ நானறியேன்!! வெண்ணிற ஆடை மூர்த்திக்கும், மணிமாலாவிற்கும் தமது திறமைகளை முழுமையாக வெளிப்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் கிடைக்கவில்லையெனத்தான் கூற வேண்டும். எனினும் ராக்கெட் ராமநாதன், வெண்ணிற ஆடை மூர்த்தியின் நகைச்சுவை கட்டங்கள் ரசிகர்களின் வரவேற்பைப்பெற்றன.

இவர்களை சந்திப்பதற்கு நேர ஒழுங்குகள் செய்யும் பொருட்டு இந் நிகழ்ச்சியை முன்நின்று நடாத்தும் 'ஈஸ்ட் லண்டன் பை (F) ன் ஆட்ஸ்' ஸ்தாபனச் செயலாளர் திரு. சீனுவாசன் அவர்களை அவருடைய இல்லத்தில் சந்தித்தேன். நான் அவரை சந்திக்க உள்ளே சென்ற போது தொலைபேசியில் 'லண்டனில் வாழும் தமிழர்கள் இவ்வாறான கலை நிகழ்ச்சிகளிலும் - பொது நிகழ்ச்சிகளிலும் அக்கறை இல்லாதவர்கள்' என திட்டி தீர்த்துக் கொண்டிருந்தார். உள்ளே நுழைந்தவுடன் நேற்றைய நிகழ்ச்சி உங்களுக்கு எதிர்ப்பார்த்த வெற்றியை அளித்ததா என்று கேட்ட போது 'ஆம்... நிச்சயமாக' என்றார். இக்குழுவினர் திரு. சீனுவாசன் தலைமையில் பிரான்ஸ், ஜெர்மனி, சுவிஸ்லாந்து, நோர்வே, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குச் செல்கிறார்கள். லண்டனில் மண்டபம் ஒழுங்கு செய்வதற்கு தாமதம் ஆகியதால் ஊர்வசி, செந்தில் ஆகியோரால் வர முடியவில்லையெனத் தெரிவித்தார். ஆறு நாடுகளில் 12 கலை நிகழ்ச்சிகளை மேடையேற்றும் இக் குழுவினர்கள் பாதிக்கப்படும் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்காக எவ்வித பணமும் கோராமல் இலவசமாக வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**நடிகர்**
**ஏ. ஈ. மனோகரனுடன்**

**கே.** தமிழ் திரைப்பட உலகத்தைப் பொறுத்தவரை உங்களுக்கு நல்ல எதிர்காலம் இருக்குமென பார்க்கிறீர்களா?

**ப.** இல்லை; தமிழ் பட உலகத்தில் நான் நம்பிக்கை இழந்து விட்டேன். நான் இப்போது தெலுங்கில்தான் கவனம் செலுத்தி வருகிறேன்.

**கே.** தெலுங்கு பட உலகில் உங்களுடைய பங்களிப்பில் குறிப்பிடக் கூடியவை எவை?

**ப.** நான் தற்போது ஏற்கனவே தமிழில் பாடியுள்ள பாடல்களை தெலுங்கில் மொழி பெயர்த்து பாட முயற்சி எடுக்கிறேன். அதற்கு முதல் படியாக என்னை வளர்த்த ஈழத்து பொப் பாடல்களையே முதலில் மேடையேற்ற தீர்மானித்திருக்கிறேன்.

**கே.** மாலைமுரசுக்கு நீங்கள் கூறுவது என்ன?

**ப.** நாங்கள் கலைஞர்கள், எமக்கு ஆடுவதையும், பாடுவதையும் தவிர வேறொன்றும் தெரியாது. அரசியலிலும், போராட்டத்திலும் எனக்கு கெட்டித்தனம் இல்லை. நான் எமது மக்களுக்கு அளிக்கக் கூடிய பங்களிப்பு இதுவாகத் தான் இருக்கும். நான் 'கோஷ்டிசாராதவன்' யார் வந்து கேட்டாலும் நிச்சயமாக எனது முழு திறமையையும் இலவசமாக அளிப்பேன். எந்தக் கோஷ்டியோ எந்தக் குழுவோ எல்லாவற்றிலும் இருப்பது எமது உடன்பிறப்புக்கள்தான். என்னைப் பொறுத்தவரை பெரியவன் சின்னவன் என்று ஒன்றுமில்லை. ஒற்றுமைதான் முதலில் தேவை. எனக்கு அரசியல் இவ்வளவு தான் பேசத் தெரியும்!



பேட்டி

✯ ர. ஜெ. கொன்ஸ்டன்ரைன்

**கே:** ஈழத்து கலை உலகில் பெயர் குறிப்பிடக் கூடிய கலைஞர்களுள் ஒருவரான நீங்கள் இந்தியாவிற்கு சென்ற பின் கலையுலகில் சாதித்தது என்ன?

**ப.** தமிழ் திரைப்படத்திற்கென 5 பாடல்கள் மட்டும் தான் எனக்கு கிடைத்தது. சில படங்களில் சிறிய கட்டங்களில் நடித்தேன். முக்கியமாக என்னுடைய மூன்று பாட்டுக் கசட்டுக்கள் அண்மையில் இந்தியாவில் வெளியாகியுள்ளன.

**கே.** தெலுங்கு திரைப்பட உலகம் வெற்றியளிக்கும் என நினைக்கிறீர்களா?

**ப.** அதை நான் கூற முடியாது... முயற்சிக்கிறேன்.

**நடிகை**
**செந்தூரியுடன்**

அடுத்து நேற்றைய நிகழ்ச்சி கதாநாயகி என்று குறிப்பிடக் கூடிய நாட்டிய நடிகை செந்தூரியை சந்தித்தேன். தாய் மொழி கர்நாடகமாக இருந்த போதிலும் மதுரையில் குடியேறியுள்ளார். பதினெட்டு வயது மதிப்பிடக் கூடிய செந்தூரியை தமிழ் தெரியுமா என்று வினவிய போது 'ஆமா சார் ரொம் நல்ல பேசுவனே' என்று கூறிய போதிலும் பெரும்பாலும் ஆங்கிலத்தில் தான் பேசினர். இளமைக்கு ஏற்ப துடிப்புடன் பேசிய

செந்தூரி அளித்த பேட்டியின் கலை முக்கிய பகுதிகள்;

**கே.** நேற்றைய நிகழ்ச்சியில் உங்களுடைய பங்களிப்புத்தான் மிகவும் தரமானதாக இருந்தது. நீங்கள் ஒரு தமிழராக இல்லாத போதிலும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் ஏன் வந்தது?

**ப.** ஏன் வந்திச்சுன்னு...மனேகர் என்னுடைய பெஸ்ட் பிரண்டு, கேட்டார் ஒத்துக்கிட்டேன்.

**கே.** நீங்கள் ஏதாவது தமிழ் திரைப்படத்திற்கு நடனமாடியுள்ளீர்களா?

**ப.** இல்லே; ஹிந்தியில் உண்டு! நான் கதாநாயகியாக நடிச்ச முதல் படம் இரண்டு மாதங்களில் வெளிவருது.

**கே.** படத்தின் பெயர் என்ன?

**ப.** 'டியூட்டி' முழு நீள நாட்டியப் படம்.

**கே.** நாட்டிய கதாநாயகியான நீங்கள் சாதாரண குடும்பக் கதையுள்ள படங்களில் நடிக்க முயற்சி எடுக்கவில்லையா?

**ப.** நிச்சயமாக இல்லே. நாட்டியப்படங்கள் கிடைத்தால் எந்த மொழியாக இருந்தாலும் நடிப்பேன். ஆனல் திரைப்படத்தில் சாதாரண கதாநாயகியாகநடிக்க நான்விரும்பவில்லே. நடிக்கவும் தெரியாது.

**கே.** இதுவரை எத்தனே நிகழ்ச்சி மேடையேற்றியுள்ளீர்கள்?

**ப.** எனது எட்டாவது வயதில் முதலாவது நிகழ்ச்சி மெட்ராஸில் மேடையேறியது. கடந்த பத்து வருடத்தில் 600 நிகழ்ச்சிகளே தாண்டி விட்டது.

**கே.** உங்களுடைய நாட்டிய குழுவில் எத்தனே அங்கத்தினர் உள்ளனர்?

**ப.** இசை கலேஞர்களுடன் மொத்தமாக 23 பேர்.

**கே.** நேற்றைய நிகழ்ச்சி உங்களுக்கு பூரண திருப்தியளித்ததா?

**ப.** நான் ஒருநாளும் திருப்தியாகியதேயில்லே சார். நான் எப்பவும் இன்னும் செய்திருக்கலாம் என்றுதான் நினேத்துக்கொண்டிருப்பேன். என்னுடைய சொந்தக் குழுவுடன் செய்யும்போது மிக மிக தரமாக செய்வேன்.

**கே.** மற்றைய நாடுகளில் என்ன செய்ய உத்தேசித்துள்ளீர்கள்?

**ப.** எல்லா நிகழ்ச்சிகளிலும் நடனம் மட்டும்தான். அதில் குறிப்பாக பரதநாட்டியம், குச்சுப்பிடி ..

**கே.** இனி கலே உலகத்திற்கு அப்பாற்பட்ட சில விடயங்களே அறிய விரும்புகிறேன்!

**ப.** அரசியலா? ஐயோ வேணும் சார்!!

**கே.** இலங்கையின் தமிழ் பேசும் மக்களுக்கு மக்கள் திலகத்தின் ஆட்சியை விட கலேஞரின் ஆட்சி மேலும் பக்கபலமாக இருக்குமென நினேக்கிறீர்களா?

**ப.** பிளீஸ் சார், அரசியலே விடுங்க, எனக்கு ஒன்றுமே தெரியாது. ஏதாவது கலே உலகத்தை பற்றி கேளுங்க. ஐந்து மணித்தியாலம் வேணுமென்றாலும் பதில் தருகிறேன்.

**கே.** திரைப்பட ஸ்டார்கள் அரசியலில்பங்குபற்றுவதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

**ப.** அவங்க திரைப்படத்திலே நல்லா செய்யுருங்க, அரசியலிலேயும் நல்லா செய்வாங்க என்றே கூறலாம்.

**கே.** எம். ஜி. ஆரிற்கு அடுத்ததாக முதலமைச்சராக ஜெயலலிதா வருவதற்கான சாத்தியக்கூறு இருக்கின்றது. அதை தனிப்பட்ட முறையில் விரும்புகிறீங்க?

**ப.** அவங்க நிறைய கெட்டித்தனம் உள்ளவங்க. நல்லா படிச்சும் இருக்கிருங்க. தமிழ் மக்கள் ஜெயலலிதாவை நிச்சயம் வரவேற்பாங்க.

## பாடகி எம். ஆர். விஜயாவுடன்

அடுத்து இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் காலே பக்திப்பாடல்கள் நிகழ்ச்சியில் அடிக்கடி சந்திக்கும் குரலான பிரபல பாடகி எம். ஆர். விஜயாவை சந்தித்தேன். எம். ஏ. பட்டதாரியான விஜயாவின் பதில்கள் கலேயுலகில் அவருடைய நீண்டகாலபங்களிப்பை பறைசாற்றியது. பாடகி எம். ஆர். விஜயா தெய்வம், பராசக்திபோன்ற தமிழ் படங்களுக்கு பாடியதன் மூலம் புகழ் பெற்றவர். இவர் மதுரையில் குடியிருக்கும் தமிழர்.

**கே.** இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் முதலில் ஏன் உங்களுக்கு ஏற்பட்டது?

**ப.** கஷ்டப்படுகின்ற மக்களுக்கு ஏதாவது என்னல் இயலக்கூடிய உதவி செய்ய தீர்மானித்தேன். மற்றும் திரு. **A. E** மனேகரன் என்னே வற்புறுத்தியதாலும் கலந்து கொண்டேன்.

**கே.** நீங்கள் ஏதாவது படத்தில் நடித்துள்ளீர்களா?

**ப.** இல்லே.

**கே.** நேற்றைய நிகழ்ச்சி உங்களுக்கு பூரண திருப்தியளித்ததா?

**ப.** இல்லே, என்னுடைய சொந்த குழு வந்திருந்தால் மிகவும் தரமான நிகழ்ச்சியாக இருந்திருக்கும். எனினும் ரசிகர்கள் மிகவும் வரவேற்ருர்கள். அந்தளவில் எனக்கு திருப்தி.

**கே.** நீங்கள் திரைப்படத்திற்கு பழைய கலேஞராக இருப்பதால் உங்களுக்கு தமிழ் நாட்டு அரசியலேப்பற்றி அதிகம் தெரிந்திருக்கும். **M.G.R,** நிர்மலா, ஜெயலலிதா... வரிசையில் உங்களுக்கும் அரசியலில் ஈடுபட வேண்டுமென்று தோன்றவில்லேயா?

**ப.** சென்ற பொதுத் தேர்தலில் கூட என்னே ஒரு கட்சிக்கு வேட்பாளராக நிற்கும்படி கேட்டார்கள். நான் மறுத்து விட்டேன். எனக்கு பாடுவதுதான் பரம திருப்தி. அதில் கிடைக்கும் வரவேற்பே போதும்.

**கே.** மக்கள் திலகத்தின் ஆட்சியை விட கலேஞரின் ஆட்சி தமிழ்பேசும் இலங்கை மக்களுக்கு மேலும் பக்கபலமாக இருக்கும் என்று கருதுகிறீர்களா?

**ப.** அப்படி நான் கூறமாட்டேன். எல்லோரும் வடிவாக கதைப்பார்கள். அது சுலபம். ஆனல் ஆட்சிக்கு வந்த பின்தான் யார் என்ன செய்யலாம் என்று கூறமுடியும். எம். ஜி. ஆரின் ஆட்சி தன்னல் இயன்றதை செய்கின்றது என்றுதான் நான் கூறுவேன். ஒருவேளே கருணநிதி இதை விட அதிகமாக செய்யலாம். ஆனல் இப்போ அதை கூறமுடியாது. ஆனல் ஒன்று நிச்சயம். இந்திய மக்களும் தமிழ் நாட்டு ஆட்சியும் இலங்கை தமிழ் பேசும் மக்களுக்கு பலவற்றை செய்யத் துடிக்கின்றது. ஆனல் அதற்குரிய வாய்ப்புக்களும் வசதிகளும் அவர்களிடம் இல்லே.

**கே.** தமிழ் நாட்டு திரைப்பட கலேஞர்கள் எவ்விதத்தில் உதவி வருகிருர்கள்?

**ப.** ஒன்ருக சேர்ந்தும் தனிப்பட்ட முறையிலும் பலர் தமது பங்களிப்பை செலுத்தி வருகிருர்கள் என்று தான் நினேக்கிறன். அண்மையில் கூட நிதி வசூலிப்பிற்காக எல்லா கலேஞர்களும் ஒரே மேடையில் தோன்றினர்கள்.


**கே.** நடிகர்கள் நடிகைகள் அரசியலில் பங்கு பற்றுவது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

**ப.** ஒன்னும் தெரியாத முட்டாள் எல்லாம் எம். எல். ஏ யாக வாருங்க. கொஞ்சம் தெரிந்த நடிகர்கள் வந்தது குற்றங்களா?

**கே.** அடுத்த முதலமைச்சராக ஜெயலலிதா வருவாரா? அதைப்பற்றி உங்களது தனிப்பட்ட அபிப்பிராயம் என்ன?

**ப.** ஜெயலலிதா முதலமைச்சராக வருவதற்கு நிறைய சந்தர்ப்பங்கள் உண்டு. என்னேப் பொறுத்தவரை ஜெயலலிதா

(14ஆம் பக்கம் பார்க்க)



"என்னப்பா இது? திருவிழாவுக்குப் போக காசு கேட்டா இதை நீட்டுறியே. காணுமா இது?"

"ஐஸ்கிறீம்... கடலேக் கொட்டைக்கு... இது நல்லாக் காணும். கொண்டு போ..."

"உதுகளுக்காகக் கோயிலுக்கு நீங்கள் போயிருப்பியள். நாங்கள் போறது ஏ.கே 47 மொடல் விளேயாட்டுத் துப்பாக்கி வாங்க. தெரியுமே?"

— ராஜகணேஸ்

கலைச்செல்வன்,

அபிநய அரச கேசரி

நடனப்பேராசான்.

# அமரர் ஏ. சுப்பையா

✯ திருமதி சாந்தினி சிவனேசன் ✯

**ஈழத்து நடனக் கலை வரலாற்றில் புதிய ஒரு சகாப்தமாக விளங்கிய நடனப்பேராசான் அமரர் ஏ. சுப்பையா பற்றி அவரது மூத்தமகள் நினைவு கூர்கிறார்.**



நான் அவருக்கு மூத்த மகள். எனது தந்தையாரே எனக்கு முதல் குருவாக இருந்து பரத நாட்டியத்தையும், கதகளியையும் கற்பித்தவர். அவர் ஒரு பரம்பரைக் கலைஞர்.

எனது தலை சிறந்த குருவும், தந்தையாகவும் விளங்கிய நடனப் பேராசான் திரு. சுப்பையா அவர்கள் இணுவில் பதியில் அக்காலத்து கலைத் துறையில் புகழ் பெற்ற பெருங்குடி மகன் அண்ணுவியார் கதிர்காமர்- ஏரம்புவிற்கும், தங்கமுத்துவிற்கும் 1922 ம் ஆண்டு தைமாதம் 13 ம் திகதி கலைத்தொண்டு புரிவதற்காக இப்புவியில் பிறந்தார். இளமையில் இவர் கோண்டாவில் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி பயின்றார். நடனக்கலையில் இளமையிலே திறமையுடையவர். சிறுவயதில் இவர் நடித்த நாடகங்களில் பெண் வேடமேற்று ரசிகர்களது ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்றவர். இவர் மேலும் கலையின் சிறப்பினை உணர்ந்து அதில் தான் தேர்ச்சி பெறவேண்டும் என்ற பெரு விருப்பு அவரை உந்தவும், 1946 ம் ஆண்டு தமிழகம் சென்று திருச்செந்தூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களிடமும், நடன கலாநிதி குரு கோபிநாத் அவர்களிடமும் முறையே பரதக் கலையையும், கதகளியையும் பயின்றார். அப்போது ஜெமினியின் சந்திரலேகா, சக்கரதாரி ஆகிய படங்களிலும் நடனமாடும் சந்தர்ப்பம் பெற்றதோடு, நடனக்குழுவுடன் பல இடங்களிலும் நடனம் ஆடும் பேற்றினைப் பெற்றிருந்தார். தான் கற்ற நடனக் கலையை மற்றையோருக்கும் வழங்க வேண்டுமென்று பேராவல் கொண்டிருந்தார்.

யாழ்நகர் வந்து திரு. இராசநாயகம் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட நடனப்பள்ளியில் சேர்ந்து மனம்போல தன் தொண்டினைச் செய்தார். ஆசை மேலும் உந்தவே மீண்டும் தாய் நாட்டில் பல நுட்பங்களைக் கற்று 1949 ம் ஆண்டு இலங்கை வந்தபோது அவருக்குத் திருமணம் காத்திருந்தது. கொக்குவில் கந்தையா சின்னப்பிள்ளை ஆகியோரின் புதல்வி பூரணம் இவரது கலைத்தொண்டிற்கு ஊக்கம் கொடுக்கும் துணைவியாகவும் கலைப்பொக்கிஷத்தின் உரிமையாளராகும் பாக்கியம் பெற்றிருந்தார்.

இவர் 1952 ம் ஆண்டளவில் தான் அரசாங்க உத்தியோகம் பெறக் கூடியதாக இருந்தது. அப்போது பல்வேறு நடனப் போட்டிகளில் சிறப்பாக சுதந்திரதினவிழா, விவசாயவிழா போன்ற விழாக்களில் நடத்தப்படும் போட்டிகளில் தமது மாணவியரை ஆயத்தப்படுத்தி போட்டிக்கு விடுவார். அவர்கள் முதற் பரிசோடு, தங்கப் பதக்கங்களும் பெற்று வருவார்கள் என்பது நிச்சயமான தொன்று, இவரது மாணவிகளின் நடன நிகழ்ச்சிகள் பல நல்ல கைங்கரியங்களுக்கு நிதி திரட்டும் சேவைகளாகப் பயன் பட்டன.

நாட்டியமே என்னவென்று புரியாத நிலையில் இருந்த வேளையில் பாடசாலையில் நடனத்தைக் கற்பித்து, இலங்கைக்கு வருகைதந்த எலிசபெத் மகாராணியார் முன்னிலையில் ஆட வைத்த பெருமையும் இவரையே சாரும். அத்துடன் குடும்பப் பெண்கள் நாட்டியம் கற்பது இழுக்கு என்ற நேரத்தில் இந்தியாவில் நாட்டியத்தை மறுமலர்ச்சி அடையச் செய்தவர் ஸ்ரீமதி ருக்மணி தேவி அம்மையார், அந்த பாதிப்பு அயல் நாடாகிய இலங்கையையும் தாக்கத்திற்குள்ளாக்கியது. அக்கால கட்டத்தில் படித்த சில கல்விமான்களின் புதல்விகளுக்கு நாட்டியத்தைக் கற்பித்து மேடை யேற்றிய பெருமை எனது தந்தையாரையே சாரும்.

இவர் 1956 ம் ஆண்டில் கொக்குவிலில் ஒரு கலாபவனத்தை ஆரம்பித்தார். அதற்கு நிரந்தரமான ஒரு கலைக்கூடத்தை, கலை உள்ளத்தைக் கவரும் சித்திர சிற்பமமைந்ததாக தனது சொந்த செலவிலேயே நிறுவினர். உலகின் எல்லாப் பாகங்களிலும் விலைமதிக்க முடியாத கலைச் செல்வமாகப் பரதநாட்டியம் மதிக்கப்படுகின்றது. பரத நாட்டியக் கலையை யாழ்ப்பாணம் கொக்குவில் கலாபவனத்திலிருந்து வளர்த்தவர், நடனக் கலையில் நல்ல தேர்ச்சியுடைய கலைஞர் எனது தந்தையார் யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக ஏற்பட்ட நடனக் கல்லூரியில் மாத்திரமல்ல மற்றும் பல இடங்களிலும் நங்கையர் பலரையும், நம்பிமார் சிலரையும் நடனமாட நன் முறையிற் சொல்லி வைத்த பெருமை இவருக்கே உரியது. அன்றே தனது உடல், பொருள் ஆவி எல்லாம் கலைக்கீந்த அண்ணுவியார் திரு.ஏரம்பனார் அவர்கள் தமது மகற்காற்றிய உதவியால் யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல ஈழவளநன்நாட்டில் பரதநாட்டியக் கலைஞர்களுள் இவர் முதன்மை பெறுகிறார். நடன ஆசிரியர் பலரின் குருவாகி நடன ஆசிரியர்களுள் சிறந்து விளங்கினர்.

இவரிடத்திலும், தமிழ்நாட்டிலும் நடனக்கலை பயின்று வல்லமையும் தேர்ச்சியும் பெற்ற ஆசிரியர்களும், மாணவர் பலரும் செய்துள்ள பல நடன நிகழ்ச்சிகள் இவரது நட்டுவாங்கத்தால் சோபிதம் பெற்றுள்ளன நாட்டியக் கலையை நன்றிந்கதோர் மாத்திரமல்ல மற்றையோரும் நன்று நன்றெனப் போற்றும் முறையில் பாடம் சொல்லி வைக்கும் பண்பான கலை ஆர்வமுள்ள சிறுவர்களைக்ப கலையின்றுகலைஞர்கள் ஆக்குவதில் மனத்திருப்தி காண்பவர்.

1960ம் ஆண்டு யாழ். பிரதேசக் கலைமன்றத்தினல் கௌரவிக்கப்பட்ட ஏழு கலைஞர்களில் ஒருவராக இவர் விளங்கியது பெருமைக்குரிய விடயமே. இவருக்கு பொன்னுடை போர்த்தி தங்கப்பதக்கமும் வழங்கினர்கள். ''கலைச்செல்வியினல்'' நடாத்தப்பட்ட கலை விழாவிலே மேற்படி கௌரவத்துடன் ''கலைச்செல்வன்'' எனும் அரிய பட்டமும் அவருக்கு வழங்கப்பட்டது. 1973ல் இணுவில் பரமானந்த நூல் நிலயத்தினர் நடாத்திய பொங்கல் விழாவிலே திரு. சபா ஆனந்தர் இவருக்கு ''அபிநய அரசகேசரி'' என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தனர்.

இவர் நடனம் பயிற்றுவதில் மிகுந்த கவனமும் பேருக்கமும் கொண்டவர். தனது மாணவியர் பிழையின்றிக் கலையினைக் கற்கவேண்டுமென்ற திடமான பிடிவாதம் கொண்டவராக இருந்தார். இதனல் திறமையானதையே முன்வைத்தார். தனது எதிர்பார்ப்பு தொய்யும்போது அவரால் அதைத் தாங்கமுடியாத பெரும் கோபாவேசம் ஏற்படும். இந்த நிலைக்கு அஞ்சி மாணவிகள் பெரும் பயபக்தியுடனும் சிரத்தையுடனும் கற்றுக்கொள்வர். பிரயாசையுடன் முயற்சிக்கும் பிள்ளைகளில் தனித்துவமான அன்பு காட்டுவார். ''சபாஷ்'' போட்டு ஊக்குவிப்பதோடு மேலும் திறம்பட அப்பிள்ளையைத் தட்டிக் கொடுப்பார். அன்பு இருந்தபோதிலும் கடுமையும், கண்டிப்பும், நிதானமும் கொண்டவர் எவரும் அவரை ஏமாற்றிவிடவோ, அலட்சியப்படுத்தவோ முடியாது. மிகவும் நேர்மையானவர் பயிற்சியை வேகப்படுத்திப் பயனற்ற முறை

(13ஆம் பக்கம் பார்க்க)

## சோதனைகள்...

சைக்கிள் சைலஞ்சர் பைப்'சுட்டதால் வந்தது' என தழுதழுத்த குரலில் சொன்னான்.

மோகன் சுந்தரேசன் சொன்னதை சிங்களத்தில் இராணுவ வீரனுக்கு சொன்னான்.

அவன் நம்ப மறுத்தான்... மோகன் தன்னால் இயன்ற மட்டும் சொல்லிப் பார்த்தான். அந்த இராணுவ வீரனோ சுந்தரேசனை விடுவதாக இல்லை.

மோகன் கெஞ்சி மன்றாடிப் பார்த்தான். இரக்கமற்ற இராணுவவீரனோ மசியவில்லை. சுந்தரேசனை அந்த இராணு வீரன் ஈரப் பெரியகுளம் இராணுவ முகாமிற்கு அழைத்துச் சென்றான். மோகனின் உள்ளம் அவனையறியாமல் ஆடியது.

மோகன் அங்கு நின்ற இராணுவ கொமாண்டருடன் கதைத்துப் பார்த்தான். ஒருவரும் கருணை காட்டவில்லை.

பஸ் சாரதியும் இராணுவத்தினருடன் கதைத்துப் பார்த்தான் பயனில்லை. நேரம் போய்க் கொண்டிருந்தது. கடிகாரத்பை பார்த்தான் மோகன். நேரம் இரவு ஏழுமணி.

சுந்தரேசன் மோகனைத் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறு இராணுவ வீரர்களுடன் சென்று கொண்டிருந்தான். இக் காட்சியைப் பார்த்த மோகன் சுடுமணலில் கிடத்தப்பட்ட மீன் போல அவதியுற்றான்.

பஸ் இடத்தை விட்டு நகராமல் நின்றது. இராணுவ வீரனொருவன் பஸ்ஸை போகுமாறு சைகை காட்டினான். பஸ் புறப்பட ஆயத்தமானது.

மோகன் பஸ்சிற்குள் ஏறாமல் அந்த இராணுவ முகாமையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றான். அவனை நோக்கி கோபத்துடன் இராணுவ வீரனொருவன் வேகமாக வந்தான்.

'ஏறடா பஸ்சிற்குள்'... என்று அதிகாரத் தொனியுடன் மோகனின் கழுத்தைப் பிடித்து தள்ளினான். அவன் தள்ளிய வேகத்தில் மோகன் பஸ்சின் படிகளை முத்தமிட்டவாறு ஏறிக் கொண்டான்.

அவனுக்கு சுந்தரேசனை விட்டு விட்டுப் போக மனம் வரவில்லை. அவனது மனம் நெருப்பில் இட்டது போலாயிற்று.

'நான் கொழும்பு போகும் வரை பார்த்துக் கொள்கின்றேன்' என்று அந்த அம்மாளுக்கு சொன்னேனே! என்னால் அந்த ஒன்றுமே செய்ய முடியவில்லையே!' என்று கண் கலங்கினான்.

'இந்த அப்பாவியை கைது செய்து போகின்றார்களே! சகோதரிகளின் நல் வாழ்வுக்காக வெளிநாடு செல்லப் புறப்பட்ட ஒரு தியாகியையா கைது செய்தார்கள் .. இவர்கள் மனிதர்கள் இல்லையா .! இவர்களுக்கு இதயமே இல்லையா!'

பஸ் கொழும்பு வந்து சேர்ந்தது. மோகனின் மனம் ஒரு நிலையில் நிற்காமல் தத்தளித்தது.

தான் தங்கியிருக்கும் அறைக்கு வந்த மோகன் கடிகாரத்தைப் பார்த்தான். இரவு ஒரு மணி. அவனுக்கு நித்திரை வரவில்லை. சிந்திக்கத் தொடங்கினான்.

'சுந்தரேசனுடைய தாயாருக்கு எப்படி அறிவிப்பது? அவனுடைய வீட்டு முகவரி எனக்கு தெரியாதே? இப்போது, என்ன, செய்வது?' அவனது மனம் அலை மோதியது.

இரண்டு நாட்கள் நகர்ந்தன. அவன் மனநிலை சரியில்லாததால் இந்த இரண்டு நாட்களும் அலுவலகத்திற்கு செல்லவில்லை. மூன்றாம் நாள் அலுவலகத்திற்குச் சென்றான்.

அலுவலகத்தில் மோகனைக் கண்டதும் அவனுடன் வேலை செய்யும் சிங்கள ஊழியர்களில் ஒருவன் மற்றவர்களைப் பார்த்து 'கொட்டியா யாழ்ப்பாணத்தில இருந்து வந்திட்டான்... குண்டு ஏதாவது கொண்டு வந்திருப்பான் பாருங்கடா' என்று கிண்டல் செய்தான்.

மோகனுக்கு இவ்வார்த்தைகளைக் கேட்க வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல இருந்தது.

'தன்னை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு கதிரையில் அமர்ந்தவாறு காலைத் தினசரியை புரட்டினான்.

'வவுனியாவிலிருந்து ஈரப் பெரிய குளத்திற்கு செல்லும் வழியில் உள்ள பற்றைக்குள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் ஒரு இளைஞன் இறந்து கிடந்ததை பாதுகாப்புப் படையினர் கண்டு அப்பிரேதத்தை வவுனியா பெரியாஸ்பத்திரியில் ஒப்படைத்துள்ளார்கள்... இச் செய்தியை மோகன் பரபரப்புடன் வாசித்தான். 'இவ் இளைஞர் நீல நிறச் சேட்டும் கறுப்பு நிற 'லோங்சும்' அணிந்திருந்தான். இச் செயலை பயங்கரவாதிகள் தான் செய்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் நம்புகின்றன."

மோகனுக்கு இச் செய்தியை வாசிக்க தலை சுற்றியது.

'சுந்தரேசா...' என இதயம் அழுகிறது. ★

---

● இடப்படும் ஆணையானது தவறாக இருந்தால், மகன் தந்தையையும், அமைச்சன் அரசனையும் சற்றும் தயங்காது எதிர்க்கலாம்.

—கன்பூசியஸ்.

---

## அமரர் ஏ. சுப்பையா

யில் அரங்கேற்றம் நிறைவேறாமல் ஒலிஒளிஒப்பனைக்காட்சியமைப்புடன் ஆட்டம், பாட்டு நட்டுவாங்கம் எல்லாம் இசையக் கலையில் நல்ல தேர்ச்சியும் ஞானமும் ஏற்பட்டு உணர்ச்சி பாவத்துடன் ஆட வல்லமை பெற்ற பின்னரே அரங்கேற்றம் நடைபெற வேண்டுமென்னும் ஆசிரியரின் நல்ல நோக்கத்திற்குப் பிள்ளைகளின் பெற்றோரும் பண்போடு, ஆக்கமும், ஊக்கமும் காட்டிக் காத்தனர்.

கலையே அவரது மூச்சு. இதனால்தான் உடலையே அவர் அதிகம் பொருட்படுத்தவில்லை. அவருக்கு இரத்த அமுக்கம் ஏற்பட்டது. இதனால் தளர்வுற்ற போதிலும் கலையைத் தளரவிடவில்லை. இவர் யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை யாழ். இராமநாதன் கல்லூரி, யாழ். இந்துமகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி போன்ற உயர்தர பாடசாலைகளில் நடனம் கற்பித்த பெருமை இவரைச்சாரும். எனது தந்தையார் தயாரித்த நாட்டிய நாடகங்கள் இரசிகர்களது ஏகோபித்த பாராட்டுதல்களைப்பெற்றது. அதில் சதி அகல்யா, சுகன்யா, ஊர்வசி, குறிஞ்சிக் குமரன், தம்பியர் மூவர், திருவெம்பாவை, சூடாமணி கொடுத்தல் போன்றவை மிகவும் பிரசித்தமானவை.

இவர் கையூடாக வளர்ந்த மாணவர் குழாம் இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் அவர் கற்ற கலையினை வளர்த்து வருகிறார்கள். பாடசாலைகளிலும், தனிக்கலாமன்றங்களிலும், சர்வகலாசாலையிலும் கலை ஆசிரியர்களாக மிளிர்கிறார்கள். இவர்களுட் சிலர் திருமதி. சியாமளா மோகன் ராஜ் (உலக நடன மேதை பத்மபூஷண் நாட்டிய கலாநிதி த. பாலசரஸ்வதியிடம் பின்பு பயின்றார்); திருமதி திரிபுர சுந்தரி, யோகானந்தம் (நாட்டிய கலாகேசரி வழுவூர் பி. இராமையாபிள்ளையிடம்பயின்றார்), கலைஞர், வேலானந்தன் (டில்லி கலாகேந்திரம் நடன கலாநிதி குரு. கோபிநாத் அவர்களிடம்பயின்றார்)செல்வி சாந்தா பொன்னுத்துரை (உலக நடனமேதை, பத்மபூஷண், நாட்டிய கலாநிதி ஸ்ரீமதி ருக்மணிதேவி அருண்டேலிடம் அடையாறு கலாஷேத்திரத்தில் பயின்றார்), இவர் தம் மாணவியர் சிலர் உரியகாலம்வரை நடனக் கலை பயின்று மேலும் பயிற்சி பெற அடையாறு. ஸ்ரீ. கே. இலக்ஷ்மணன், கே. என். தண்டாயுதபாணிபிள்ளை போன்றோரிடம் கலை பயின்றுள்ளனர். அவர்களின் பெயர்கள் இங்கு குறிப்பிட முடியாது. அவ்வளவிற்கு அவரது கலைச் சந்ததி பெருகியுள்ளது.

இவ்வளவு பெரிய கலைச் சேவை செய்த எனதுதந்தையார் திடீரென ஏற்பட்ட இரத்த உயர் அழுத்தத்தினால் கொழும்பு அரச மருத்துவமனையில் காலமானார். தனதுகலைச்சேவையை கலாபவனத்தின் மூலம் பரம்பரையாக வளர்க்கவேண்டும் என்பதே அவரது நோக்கமும் குறிக்கோளுமாகும். அதற்கிணங்க அச்சேவை தொடர்ந்து நடைபெற எல்லாம் வல்ல ஆடவல்லானின் அனுக்கிரகம் கிடைக்கவேண்டும் எனவும், அவன் தாள்களை அடைந்த எனது தந்தையார் கலைரூபமாக இருந்துகொண்டே நம்மை எல்லாம் ஆசீர்வதிக்க வேண்டுமெனவும் பிரார்த்திக்கிறேன். வாழ்வு சிறிது! வளர் கலை பெரிது. ●

# பத்துக் கேள்விகள்



''எல்லாம் உனக்காக... உனக்காக எண்டு சொல்லுறியள்... நீங்கள் மெலிஞ்சு போறதும் எனக்காகவா?''

''வேறையென்ன... என்ர வருமானத்திற்கு சாப்பாட்டில நான் தியாகம் செய்யிறதும் உனக்காகத்தான்... இல்லையாண்டு ஆரையும் கேட்டுப் பார்...''

— சிவா

## மரந்தறிக்கும் தொழிலாளி வல்லி நாகலிங்கம் கூறுகிறார்.

**1. உங்களைப் பற்றிக் கூறுங்கள்?**

● எனக்கு இப்ப 69 வயது ஆகுது. என் மனைவி காலமாகி ரெண்டு வரியமாகுது. எனக்கு எட்டுப் பிள்ளைகள். ஆறு பெண்கள்; ரெண்டு பையன்கள். ஒரு பொடியனும் மகளும் என்னுடன் உள்ளனர். மற்றவர்கள் எல்லாரும் கலியாணமாகிக் குடும்பமாக இருக்கிறார்கள்.

**2. எவ்வளவு காலமாக மரந்தறிக்கும் வேலையைச் செய்து வருகிறீர்கள்?**

● 30 வயதில மரந்தறிக்க கோடாலியுடனும் தேடாக் கயிற்றுடனும் வெளிக்கிட்டன். இப்ப 56 வருஷமாக இத்தொழிலைச் செய்து வருகிறன்.

**3. எத்தகைய மரங்களைத் தறிப்பீர்கள்?**

● எந்த மரமாயினும் சரி. எந்த மரத்தைத் தறிக்க எவர் கூப்பிடுகிறாரோ, அந்த மரத்தைத் தறிப்பேன். உயர்ந்து வளர்ந்திருக்கும் பாரிய மகோகனி மரங்களிலிருந்து தென்னை பனை ஈருகத் தறிப்பன். என்னைப் போல எவராலும் மரம் தறிக்க முடியாது. நம்பி நான் மரந் தறித்தால் பக்கங்களிலுள்ள விடுகள், மின்சாரக் கம்பிகள் எதற்கும் பழுது ஏற்படாமல் தறிப்பன். நான் விரும்பிய திக்கில மரத்தைச் சரித்து விழுத்துவேன்.

**4. நீங்கள் தனித்தா மரம் தறிப்பீர்கள்?**

● இல்லை... கூட ஒரிரு வரைக் கூட்டிப் போவன். மேலே யிருந்து, திட்டம் போட்டுத் தறிப்பது நான். கீழே கயிறு பிடித்து இழுக்க உதவியாளர் நிற்பினம்.



படம்; பேபி போட்டோ பேட்டி; ஊர்சுற்றியார்

திரு. வல்லி நாகலிங்கம்

**5. மேலே இருந்து உதவியாளர்கள் தறிக்க மாட்டார்களா?**

● மேலேயிருந்து தறிக்கிறது ஒரு ஆர்ட்டுங்க. எல்லாராலும் தறிக்கமுடியாது. கால்களைக் கிளைகளில் ஊன்றி நின்று, எழுந்துநின்று கோடாலியைத் தூக்கித் தறிக்கிறது இலேசான காரியமல்ல. அறுபது எழுபது அடி உயர மரக் கிளையிலே நின்று கொண்டு கீழே பார்க்க சிலருக்குத் தலையைச் சுத்தும். கோடாலியைத் தூக்கி இறக்கும்போது, அது சரியாக விழாது தடைப்பட்டால் அவ்வளவுதான்...

**6. இவ்வளவு வருடமாக மரந்தறிக்கிறீர்களே? ஏதாவது....**

● கடவுள் துணையால அப்படி ஒரு விபத்தும் நிகழவில்லை.

**7. 56 வருடத்திற்கு முந்தி மரந்தறிக்க எவ்வளவு கூலி? இப்ப எப்படி?**

● தொழிலைத் தொடங்கிய ஆரம்பகாலத்தில் ஒரு பனை தறிக்க 50 சதம். பெரிய மலை வேம்பைத் தறிக்க 3 ரூபா வரை. இப்ப ஒரு மலை வேம்பைத் தறிக்க 1000ரூபாவரை பெறுகிறம். பனை, தென்னை தறிக்க 25 ரூபா... இன்றைக்கு ஆக இரு தென்னை தறித்தம். இரண்டுபேர் 25 ரூபா கிடைச்சுது.

**8. ஒவ்வொரு நாளும் வேலை இருக்குமா?**

● ஞாயிற்றுக் கிழமையில வேலைக்குப் போகமாட்டன்.. மற்றப்படி நான்கு ஐந்து நாட்களுக்கு வேலை கிடைக்கும்.. எனக்கு வேலை இருக்கும். ஒரு அடி தள்ளி இரண்டு வீட்டுக்கு இடையில் நிற்கிற தென்னையைக்கூட நான் துண்டு போட்டு, சேதமேற்படாமல் விழுத்திவிடுவன். அதனால என்னைத் தேடி வருவார்கள்.

**9. உங்கள் ஆண்பிள்ளைகள் என்ன வேலை செய்கிறார்கள்?**

● அவர்கள் மேசன்வேலை செய்கிறார்கள். மரந்தறிக்கும் வேலையில் ஒருவருமில்லை.

**10. தொடர்ந்து இந்த வேலையைச் செய்வீர்களா?**

● உடலில் பலமும், உழைச்சுச் சாப்பிட வேணும் என்ற பிடிவாதமும் இருக்கும்வரை இத்தொழிலைச் செய்வேன்.

### நட்சத்திர இரவு

நல்ல அறிவாளி, முதலமைச்சராக வருவதற்கு எல்லாத் தகுதியும் பெற்றவர், நிச்சயமாக முதலமைச்சராக வரப்போபவர்.

**கே.** கடைசியாக திரை உலகத்தைப்பற்றி ஒரு கேள்வி, இன்றைய முன்னணி நட்சத்திரம் ரேவதி பட உலகை விட்டு முற்றாக ஒதுங்கப் போவதாக கூறியுள்ளார். இதைசிலசினிமா பத்திரிகைகள் ஈடுசெய்ய முடியாத இழப்பு என்று கூறி வருகின்றன. இதை நீங்கள் ஏற்கிறீர்களா?

**ப.** நான் ஏற்கமாட்டேன். சிவாஜி கணேசன் வேறு. ரேவதி வேறு. இன்று புது முகங்கள் அதிகமாக வந்து போகின்றார்கள். சில படங்கள் நன்றாக நடித்தவுடன் எல்லோரும் புகழ்வார்கள். பின் சிறிது காலம் செல்ல விலாசம் தெரியாமல் போய் விடுவார்கள். எனது நீண்ட கால திரைப்பட அனுபவத்தை வைத்து கூறுவேன். நடிகை ரேவதியின் பிரிவு நிச்சயமாக ஈடு செய்யக் கூடியது. அவங்க நல்ல நடிகை அதை ஏத்துக்கிறேன்.

# நரியும் பூனையும்

அரவிந்தன்

ஒரு காட்டில் உள்ள எல்லா மிருகங்களும் சிங்கத்திடம் வந்து சொல்லின: "நீரே எங்கள் அரசன். நரி மிகவும் கெட்ட மிருகமாக வுள்ளது. அதனை நாங்கள் திருத்தி நல்ல மிருகமாக்க வேண்டும்!"

"ஏன் நரி கெட்ட மிருகம்?" எனச் சிங்கம் கேட்டது.

"அது எங்களைப் பார்த்துச் சிரிக்கிறது. எங்களுடைய வேலைகளில் உதவுவதில்லை. பகல் முழுவதும் காட்டில் எதுவுமே செய்யாது இருந்துவிட்டு, மாலையில் களவாக எங்கள் உணவை எடுத்துச் சாப்பிட்டுவிடுகிறது" என்று மிருகங்கள் கூறின.

"நரியிடம் போய் நான் கூப்பிட்டதாகக் கூறி, இங்கு அழைத்து வாருங்கள். நான் அதனுடன் பேசுகிறேன்" என்றது சிங்கம்.

ஒவ்வொன்ருக ஒவ்வொரு மிருகமும் நரியிடம் சென்றன. நரி சிரித்து விட்டு, 'நான் வர மாட்டேன்' என்றது. மிருகங்கள் திரும்பி வந்து சிங்கத்திடம், 'நரி வர மாட்டுதாம்' என்றன.

"எவராலும் நரியை என்னிடம் அழைத்து வர முடியாதா?" என்று சிங்கம் கேட்டது. பின்னர் பூனையைப் பார்த்து, "நீ போய், அதனை இங்கு கூட்டிவா' என்றது.

பூனை போக விரும்பவில்லை. அதற்கு நரியைப் பிடிக்காது.

'நான் ஒரு சிறிய பூனை. என்ருல் நரியைக் கூட்டிவர முடியாது' என்றது பூனை.

ஆனல், சிங்கராசா கேட்கவில்லை.

'நீ எப்படியாவது நான் சொன்னதைச் செய்...' என்று கட்டளையிட்டது.

பூனை நரியிடம் சென்றது. பூனை வருவதைக் கண்ட நரி, வீட்டின் கதவடிக்கு வந்தது.

'வணக்கம், நண்பனே' என்றது நரி.

'வணக்கம்...' என்றது பூனை.

'உள்ளேவா... நான் உனக்குக் கொஞ்சம் பால் தருகிறேன்...'

பூனைக்கு நடந்து வந்த களைப்பு; தாகம் வேறு. நரி தந்த பாலைக் குடித்தது.

'உனக்குப் பசிக்கிறதா?' என்று நரி கேட்டது.

'ஆமாம்... பசிக்கிறது. நீண்ட தூரம் நடந்து வந்த களைப்பு பசிக்கிறது. காலை உணவுக்குப்பின் எதுவும் சாப்பிடவில்லை, என்றது பூனை.

'அப்படியா, நீ என்ன சாப்பிட விரும்புகிருய்?...' என்று நரி கேட்டது.

'எலி இருக்கிறதா?'

'இங்கு எலி இல்லை. பக்கத்து வீட்டில் இருக்கிறது. என்னுடன் வா. போய்ப்பார்ப்போம்' என்றது நரி.

அடுத்த வீட்டில் ஒரு மனிதன் வசித்து வந்தான். அவன், கோழிகள் வளர்த்தான். இரவு வேளைகளில் நரி அந்தக் கோழிகளில் சிலவற்றைப் பிடித்துத் தின்றுவிடும். அதனுல் நரியைப்பிடிக்க, பொறி ஒன்றைத் தயார் செய்து, கோழிக் கூட்டின் வாசலில் வைத்திருந்தான். அந்தப் பொறியை நரி கண்டதால், அதில் அகப்படவில்லை. நரி பூனையைக் கோழிக் கூட்டிற்கு அருகே அழைத்து வந்தது.

"அங்கு போய்ப் பார்... பெரியதொரு எலி அங்குள்ளது...' என்றது நரி.

முட்டாள் பூனை, எலி ஆசையால் போய், பொறியில் அகப்பட்டுக் கொண்டது. நரி சிரித்தது.

'என்னை எவரும் சிங்கத்திடம் அழைத்துச் செல்ல முடியாது.'

மறுநாள் பொறியிலிருந்து பூனை ஒரு விதமாகத் தப்பியது அது சிங்கத்திடம் வந்தது.

'எவராலும் நரியைப் பிடிக்க முடியாது' என்றது பூனை.

உண்மைதான். நரி இப்போதும் கெட்ட பிராணியாகத் தான் அலைகிறது. அதற்கு நண்பர்கள்இல்லை- பிறருடைய உணவைக் களவாடித் தின்றுவிட்டு நண்பர்கள் இல்லாமல் திரிகிறது.

## கங்காரு




கங்காரு ஒரு விந்தையான விலங்கு; அவுஸ்திரேலியாவில் மட்டுமே வாழ்கிறது. கங்காருவின் முன்னிரு கால்களும் சிறியவை. பின்னிரு கால்களும் நீளமானவை. பமல பொருந்தியவை. கங்காரு பின் கால்களால் தாவித் தாவிக் குதித்துச் செல்லும். கங்காரு புல் பூண்டு தழைகள் ஆகியவற்றைத் தின்று வாழ்கிறது.

கங்காரு மூன்று மீற்றர் நீளமும் இரண்டு மீற்றர் உயரமும் இருக்கும். கங்காரு குட்டி போட்டுப் பால் கொடுக்கும். குட்டி பிறக்கும்போது மூன்று சென்ரி மீற்றர் நீளமே இருக்கும்! குட்டி பிறந்தவுடன் தன் தாயின் வயிற்றில் உள்ள பைக்குள் ஊர்ந்து சென்று தங்கிவிடும். அது அங்கு சுமார் ஆறு மாதகாலம் தாய்ப்பாலைக் குடித்து வளரும். வளர்ந்த குட்டி தாயின் வயிற்றில் பையிலிருந்து தலையை மட்டும் நீட்டிப் பார்ப்பதைக்காண விந்தையாக இருக்கும். தாய் மேயும்போது குட்டியும் பையிலிருந்தபடியே தலையை நீட்டிப் புல்லைக் கடித்துத் தின்னும். ஒரு நாய்க்குட்டி அளவு வளர்ந்தபின் கங்காருக் குட்டி தாய்ப்பையைவிட்டு இறங்கிவிடும்.

கங்காருவின் வால் மிகுந்த வலிமையுள்ளது. இது மிகவும் பயந்த இயல்புள்ள பிராணி.

கங்காருவில் மொத்தம் 120 வகை உண்டு. கங்காருவை அவுஸ்திரேலியாவின் தேசிய விலங்காகக் கொண்டுள்ளனர்.

—உமா



## ★ கட்டு மரம் ★

கட்டு மரம் கட்டிக்கிட்டு
கடல் வழியே போற அண்ணே
கடுங் காற்று சுழன்றடித்தால்
கடவுள் தான் காக்க வேணும்.

மீன் பிடிக்க வலை கொண்டு
நெடுந் தூரம் போற அண்ணே
நேவி வள்ளம் எதிர்ப்பட்டால்
தம்பிமார் தான் காக்க வேணும்

— பகீரதா —

சிறுவர் முரசு

# சோதிட முரசு

- வைசாயனர் -

## 29 - 8 - 86 முதல் 4 - 9 - 86 வரை

### மேஷம்

பொருள் வருமானம் நன்ருக உள்ளது. உடல் நலம் சீராக இருக்கும். அந்நிய தேச பொருள் வரவுண்டு. இல்லத்தில் சிறப்புகள் நிகழும். வாகன விஷ பீடைகள் தோன்றும்.
அதிர்ஷ்ட நாட்கள்: ஆக 29, 30;

### ரிஷபம்

தேக சுகக் குறைவும் பிரயாண கஷ்டமும் வருமானத்தில் வீழ்ச்சியும் காரிய தாமதமும் ஏற்படும். கடன்பயம், அவமிருத்து, புத்திரரால் துன்பம், தே:ான்றும்,
அதிர்ஷ்ட நாட்கள் செப். 1, 2,

### மிதுனம்

கஷ்டங்கள் தோன்றினுஞ்சமாளிக்கும் தன்மையும் உண்டு. குடும்பசுகம் பாதிப்படையும். பொருள்வரவும் இலட்சுமி கரமும் உண்டு. பெரியவர்களால் உதவி, அன்னிய நாட்டு பொருள் வரவு உண்டு.
அதிர்ஷ்ட நாட்கள்: ஆக 29, 30;

### கடகம்

மன அமைதியின்மை, உடல் நல குறைவு, வருமானம் குன்றல். அக்கினி, ஆயுதபயம். பிரயாணக் கஷ்டம், அன்னியரால் துன்பம் ஏற்படும். நண்பர்களால், வீண் பிரச்சினைக்கு இல காகலாம்.
அதிர்ஷ்ட நாட்கள்: செப். 1,2.

### சிம்மம்

வருவாயை விட செலவு கூடும். உற உறவினரிடையில் அமங்கலங்கள் இடம்பெறும். புத்திரரால் கவலேயும், பெரியவர்களால் ஆதரவும் உண்டு. வெளிநாடு செல்லும் வாய்ப்பும், பொருட் செலவும் காட்டுகிறது.
அதிர்ஷ்ட நாட்கள்: ஆக. 29, 30;

### கன்னி

உடல்நலகுறைவும், குடும்பத்தில் பிணக்குகளும் தோன்றும். எடுத்த காரியங்களில் தடை, அரசபயம் ஆகியன ஏற்படும். அந்நிய தேசபொருள் வரவுண்டு
அதிர்ஷ்ட நாட்கள்: செப். 1, 2.

### துலாம்

பொருள் வரவு, உடல் ஆரோக்கியம், கோவில் தரிசனம், அறச்செய்கை மிகுந்து காணப்படுகின்றது. இல்லத்தில் சுபகாரியங்கள்நிகழும். கடைசி பகுதியில் காரியதடை, தாமதம், அலேச்சல் உண்டு.
அதிர்ஷ்ட நாட்கள்: ஆக. 29, 30, 31; செப். 4.

### விருச்சிகம்

அதிக பொருள் வரவு, குடும்ப சுகம், தேகநலம் காட்டுகிறது. ஆயினும் கடைசிப் பகுதியில் திடீர் செலவு, அலேச்சல், கைப்பொருட் சேதம். ஏமாற்றம், விண்பகை ஆகியன தோன்றலாம்.
அதிர்ஷ்ட நாட்கள்: செப். 1, 2, 3.

### தனுசு

தடைப்பட்ட காரியங்கள் வெற்றியாகும். வெளி நாட்டு பொருள் வரவும், தூரதேசப் பிரயாணமும் காட்டுகின்றது. வாகன, அக்கினி, சோரபயமுண்டு உறவினரால் வீண் சச்சரவுகள் தோன்றும், அதிர்ஷ்ட நாட்கள்: செப். 3, 4

### மகரம்

பொருள் வருமானம் மந்தமாக இருக்கும் திடீர் செலவுகட்கும் இடமுண்டு. அன்னியரால் பொருள் வரவும், அடிமைகளால் உதவியும் காணப்படுகின்றது. பிரயாணக்கஷ்டம், கைப்பொருள் சேதம் நிகழலாம்.
அதிர்ஷ்ட நாட்கள்: செப். 1, 2

## கண்ணீர்

எனது நாடும் நகரும்
எரிந்து சாம்பல் பூத்த
மேடாயிற்று!
என்ருல்
அழமுடியவில்லே.
என் காதல் கணவன்
என் கண் முன்ருலேயே
இராணுவத்தினராலே
இழுத்துச் செல்லப்பட்டான்!
அபபோதும் என்ருல்
அழமுடியவில்லே!
கல்லூரி சென்ற
என் மகன்
திரும்பும் வழியில்
பொலீசாரினுல்
கைது செய்யப்பட்டான்!
அப்போதும் என்ருல்
அழமுடியவில்லே!
"உங்கள் துன்பங்களேயெல்லாம்
எங்களால் தான்
தீர்த்து வைக்க முடியும்!"
"வரும் தேர்தலில்
எங்களேயே தேர்ந்தெடுங்கள்
என்று
"வோட்டு" கேட்க வந்த
வேட்பாளரைக் கண்டதும்
கண்களில் நீர் பெருகிவிட்டது'
அவனேக்
குதறி எறிந்து விட்டு
"ஓ" வென்று
அழவேண்டும்
போலிருக்கிறது!

—கணபதி கணேசன்—
(நன்றி: சூரியனேத்தொலேத்தவர்கள்)
கவிதைத்தொகுதி.

### கும்பம்

பணப்பயம் அலேச்சல், காரிய தடை, நண்பர்களுடன் பகை குடும்பத்தில் சச்சரவு ஆகியன தோன்றும். வருமானம் குறையும். புத்திரரால் மனத்துன்பம் ஏற்படும்.
அதிர்ஷ்ட நாட்கள்: ஆக. 29, 30

### மீனம்

வருவாயை விட கூடிய செலவு, காரியங்களில் தடை, வீண் அலேச்சல் பிரயாணக் கஷ்டம், திருடர் பயம் ஆகியன ஏற்படும். குடும்பத்தில் சுககுறைவு, இனசன பந்தங்கட்குள் பகை விஷ, ஆயுத பயம் ஆகியன காட்டுகின்றது
அதிர்ஷ்ட நாட்கள்: செப். 1,2.

"மா லேமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப்பகுதியில் 29-8 86 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலேபேசி: 2243^